உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௪௧.] சுபானு-ஸ்ரீ மார்கழி மீ [பகுதி—௨.
Vol. 41. December 1943–January 1944 No. 2.

உள்ளுறை.

தென்னாட்டில் வேரூன்றி அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வரன்முறை:—	சுவாமி விபுலாநந்தரவர்கள்	௪௧-௪௬
ஸர் ஜே. ஜே. தாம்ஸனின் இளமைப்பருவம்:—	ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.	௪௭—௫0
கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்:)—	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	௫௧—௫௬
சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா:—	ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரம் ஐயங்காரவர்கள்	௫௭—௬௨
சேதுவேந்தரது 35-வது ஆண்டுவிழா வாழ்த்துப்பா:—	ஸ்ரீ. ஒடுக்கம் நெல்லையப்பத் தம்பிரானவர்கள்	௬௩
சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா நாண்மங்கலக்கவிகள்:—	ஸ்ரீ. மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள் முதலிய புலவர்கள்	௬௪—௭௬
பண்டைத்தமிழர்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.	௭௭—௮0
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள்:—	(அநுபந்தம்)	1—2

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

	I. சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	* தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்	6	0	0
	* ஷை இரண்டாம்பாகம் ...	4	8	0
	ஷை மூன்றாம்பாகம் ...	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	*அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...			
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை. ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

[தொகுதி-௪௧.] சுபானு-ஸு மார்கழி மீ [பகுதி-௨.

Vol. 41. December 1943-January 1944 No. 2.

தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வரன்முறை

[ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர்]

செந்தமிழ் ௪௦-ஆம் தொகுதியின் ௮௦-ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்பும், அருளும், ஆர்வமும் பொருந்திய சமயநெறியானது மத்தியகால இந்தியாவிலே எவ்விடத்தும் பரவியது அக்கால நிலைக்கு ஏற்புடையதாக இருந்தது. மேலே நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளுக்குச் சார்பாகிய அறிகுறிகள் முன்னமே காணப்பட்டன. சாதிபேதமின்றிச் சமயவொற்றுமையினாலே மக்கள் உடன் பிறந்தார்போன்று வாழ்தலையும், ஆண்டவனுக்குத் தாம் அடிமைகள் எனக்கொள்ளுதலையும் அறத்தாறாகக்கொண்ட சமயநெறியொன்று அராபிநாட்டிலே அக்காலத்திலே தோற்றியது. அச்சமயமானது பாரதநாட்டினுள்ளே புகுதற்குரிய காலம் அணுகிவந்தது. மேலே குறித்த அறநெறிகள் அராபிநாட்டிலே வளர்ச்சியெய்திய காலத்திலேயே, தமிழ்நாட்டு ஞானவான்களும் அக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய சமுதாயத்தினைத் தமது நாட்டிலே நிறுவினார்கள். மக்களுடைய தனித்த வாழ்க்கையினையும், கூட்டமாகக்கூடிவாழும் வாழ்க்கையினையும் நியதிசெய்கின்ற தெய்வசக்தியின் ஆற்றல் எத்துணை அற்புதமானது! இந்நிகழ்ச்சிகள் நடந்தகாலத்திற்குப் பன்னிராண்டுநூற்றாண்டுகளுக்குமுன்பு

இப்பரிசுத்தபூமியிலே கௌதமபுத்தர் தோன்றி, அறநெறியினைப் போதித்து, மக்களை நல்வழிப்படுத்தியகாலத்திலே, சீனதேசத்திலே கோண்பூசியஸ், லாஓட்சே என்பவர்களும் யவனதேசத்திலே பைதாகோராஸ் என்பவரும் தோன்றிக் கௌதமபுத்தர் போதித்த உண்மைகளைப்போன்ற அறநெறிமுடிபுகளையே போதித்தார்கள். ஆழ்வார் நாயன்மாரது வாழ்க்கையினாலும், போதனையினாலும், உயர்குலத்தோரும் இழிகுலத்தோரும் உடன்பிறந்தார்போன்று ஒன்றுகூடி வாழுகின்றநிலைமை யேற்பட்டபடியினாலே, அக்காலத்திலே பாரதநாட்டினை ஆக்கிரமித்த முகலாயரின் தாக்குதலினாலே நாடு நிலைகுலையவில்லை. அஃதன்றியும், ஆளுகைபுரிந்த முகலாயரின் சமயக்கொள்கைகள் ஒருவாறு சமரசப்படுத்தப்பட்டன. ஆண்டவனிடத்துப் பக்தியும், மக்கள்பால் அன்பும், இசை சிற்பம் கவிதை முதலிய அழகுக்கலைகளும் இந்துக்களுக்கும் முகலாயர்களுக்கும் பொதுவுடைமைகளாக இருந்தன. முகலாயர்கள் மங்கோலிய இனத்தைச்சேர்ந்தவர்கள். அவர்களது முன்னோர்கள் நித்தியமான நீலவானத்தை வழிபட்ட ஷாமா மதத்தைச்சேர்ந்தவர்கள். தாஓ மதம் புத்தமதங்களைப்போல ஷாமாமதமும் அழகுக்கலையைப் பேணிய மதமாகும். முகலாயர் இரானிய அழகுக்கலையிலே நன்கு படிந்தவர்கள். சில முகலாய சக்கரவர்த்திகள் இந்துசமயத் தாய்மாரின்மக்களாய், இந்துசமயத்தையும் இஸ்லாமியமதத்தையும் சமரசப்படுத்தமுயன்றார்களென்று இதிகாசநூல்வாயிலாக அறிகின்றோம். இஸ்லாமியராகிய அக்பர்சக்கரவர்த்தி இந்துசமயமனையிலே வளர்ந்தவர். இவர் இருசமயங்களையும் சமரசப்படுத்திய மதமொன்றினை ஆக்குதற்கு முயன்றார். இடைக்கால இந்தியாவின் மனநோக்கினையும் அரசியற்கொள்கையினையும் வழிப்படுத்திய பெரியோர் எல்லாமதத்தினரும் வழிபடுகின்றதெய்வம் ஒன்றேயென அறிந்தாராதலினாலே, ஒவ்வொருமதத்தினரும் தத்தம் முன்னோர் கைக்கொண்ட சமயக்கொள்கைகளையும் ஆசார அநுஷ்டானங்களையும் கைக்கொண்டொழுகுவதே முறையென அறிந்தனர். தத்துவவாதமானது வேற்றுமைகாணும் இடங்களிற்கூட இதயத்தெழுந்த அன்பானது ஒற்றுமைகாண்கிறது. அங்ஙனமாதலின், அப்பெரியார் அன்பைப் பெருக்கமுயன்றனர். அன்புநெறிபரவிய

வான்முறையினைக் கூறுமுன், இடைக்கால இந்தியாவின் மனநிலையினை நன்னெறிப்படுத்திய தென்னாட்டுப் பெரியாரொருவரின் வாழ்க்கைவரலாற்றினைச் சுருக்கமாகத் தருவாம்.

ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபெரும்புதூரினைப் பிறப்பிடமாகக்கொண்டார். அவர் நிலவுலகில் அவதரித்த ஆண்டு கி. பி. 1017 என ஒரு சாரார் கொள்வர். மற்றொருசாரார் கி. பி. 1037 என்பர். திரு. ஸர். இராதாகிருஷ்ணன் கி. பி. 1027 எனக் கொண்டார். ஸ்ரீராமானுஜரின் வாழ்க்கையிறுதியாண்டு கி. பி. 1137 என்பது அனைவர்க்கும் ஒத்தமுடிபு. அங்ஙனமாதலின் இப்பெரியார் நூலோர் வகுத்த எல்லையின் இகந்து, ஒரு நூற்றாண்டின்மேல் உயிர்வாழ்ந்திருந்தார். தென்னாட்டிலே ஸ்ரீமந். நாதமுனிகளும், யாமுனாசாரியரும், வடநாட்டிலே இராமாநந்தரும், கபீர்தாஸரும் இவ்வாறே நூற்றாண்டு என்னும் எல்லையை இகந்து வாழ்ந்தனர். ஆண்டவனிடத்தில் நிறைந்த நம்பிக்கையுடையோர் எத்தொழில்செய்யினும் மனத்தினை அலையவிடாது சாந்தநிலையில் நிறுத்துந்தகையராதலின், நீண்டகாலம் உயிர்வாழ்ந்திருந்தார் என்று எண்ணவேண்டியிருக்கிறது. திருவரங்கத்தில்வாழும் ஸ்ரீவைஷ்ணவர்களுள்ளும், தென்னிந்தியாவில்வாழும் முஸ்லீம்களுள்ளும், ஒருநூற்றாண்டினை அணுகியவரை இன்றும் காணலாம்.

ஸ்ரீராமானுஜர் காஞ்சிமாநகரிலே யாதவப்பிரகாசரிடத்து வேதாந்தம் கற்றனர். காஞ்சி பலநூற்றாண்டுகளுக்குச் சிறந்த கல்வி நிலையமாக விளங்கியது. ஸ்ரீமந். நாதமுனிகளின் வழித்தோன்றலாகிய யாமுனாசாரியர் ஆளவந்தார் என்னும் திருநாமமுமுடையராய் இருந்தார். இவர் இராமானுஜரின் கல்வியறிவைக் குறித்துக் கேள்வியுற்று அவரைத் தமக்குப்பின் தமதுபீடத்தில் இருத்தும் பொருட்டுத் தம்மிடம் வரும்படி அழைத்தார். இராமானுஜர் வந்துசேர்வதன்முன்னம், யாமுனாசாரியர் பூதவுடலை நீத்தாராதலினாலே, அவர் வைத்துச்சென்ற மூன்று பெரியவேலைகளை நிறைவேற்றும் கடமை இராமானுஜருக்கு உரியதாயிற்று. அவ்வேலைகள் யாவையோவெனில், விஷ்ணுபுராணத்தை ஆக்கியோராகிய பராசர முனிவர்பெயரினை நிலைக்கச்செய்தல், சடகோபரது மகிமையினை

உலகிற்கு உணர்த்துதல், ப்ரும்மசூத்திரத்துக்கு விசிஷ்டாத்வைத உரைவகுத்தல் என்பனவே யாமுனுசாரியர் வைத்துச்சென்ற மூன்றுவேலைகளாம். ஸ்ரீராமாநுஜர் சந்நியாச ஆசிரமத்தைக் கைக்கொண்டு ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்பிரபந்தங்களையும், யாமுனுசாரியருடைய நூல்களையும் கற்றுணர்ந்தார். ப்ரும்மசூத்திரத்திற்கு அமைந்த போதாயனபாஷ்யத்தைப் பெற்றுவரும்பொருட்டு இராமாநுஜமுனிவர் காசுமீரதேசத்திற்குச்சென்றுவந்ததாகவும் சொல்லுவர். கி. பி. 1100-ஆம் ஆண்டில் இவர் ஸ்ரீபாஷ்யத்தை எழுதிமுடித்து, அதன் உண்மைகளைப் பலஇடங்களிலும் பிரசங்கித்தாரென்றும், வடநாட்டிலே பல முக்கியஸ்தலங்களுக்கு யாத்திரைசென்று காசியிலும் பூரி ஜகந்நாதத்திலும் பௌத்தரை வாதில் வென்று அவ்விடங்களிலே வைஷ்ணவசம்பிரதாயத் திருமடங்களை ஏற்படுத்தினுர் என்றும் அறிகின்றோம். மேலும், இவர் தம் சிஷ்யராகிய கூரேசரின் புதல்வராகிய பட்டரைக்கொண்டு விஷ்ணுசகஸ்ரநாமத்திற்கு உரை எழுதுவித்து அதன்மூலமாகப் பராசரமுனிவரதுபெயர் நிலைபெறுமாறுசெய்தாரென்றும், மற்ரொரு சிஷ்யராகிய குருகேசரைக்கொண்டு திருவாய்மொழிக்கு ஓர் உரை எழுதுவித்து நம்மாழ்வாருடைய மகிமையினை உலகிற்கு விளக்கினுரென்றும் அறிஞர் கூறுவர். சைவமதத்திலே கடும்பற்றுள்ள சோழமன்னர்கள் துன்புறுத்தியதனுலே இவர் மைசூர் இராஜ்யத்தை அடைந்து அங்கு விஷ்ணுவர்த்தனன் என்னும் ஹொய்சளமன்னனை ஜைனமதத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவசமயத்தைச் சேருமாறு செய்தாரென்றும் அறிகின்றோம். இவர் மேல்கோட்டை என்னுமிடத்திற் பன்னீராண்டு வாழ்ந்துவந்தகாலத்திலே தில்லிமாநகரிலிருந்து வரவழைத்த ஸ்ரீகிருஷ்ணவுருவத்தினை மேல்கோட்டையிலே ஸ்தாபித்தார். இவ்வுருவம், ஸ்ரீகிருஷ்ணனிடத்துப் பேரன்புபூண்டிருந்த இஸ்லாமிய இளவரசி ஒருத்தி போற்றி வழிபட்டுவந்த உருவம் என்பர். ஆதலினுலே, அவ் இஸ்லாமிய இளநங்கை கண்ணபிரானுக்குக் காதலியாகக் கருதப்பட்டாள். இவ்வுருவம் ஸ்தாபிக்கப்பட்ட திருக்கோயிலிலே தீண்டாக்குலத்தினைச்சேர்ந்த தொண்டரும், ஓரோர் விசேடகாலத்திற்சென்று வழிபடுதற்குரியர். ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சமயாநுஷ்டான நெறிமுறைகளை ஒழுங்கின்வண்ணம் செய்துவைக்கும்பொருட்டு ஸ்ரீராமாநுஜர் சிம்மாசநாதிபதிகளை

ஏற்படுத்தினார். இராமாநுஜர் தமது ஆத்மீகசக்தி, கல்விநலம், நிருவாகத்திறமை என்னும் இவற்றினாலே ஸ்ரீவைஷ்ணசமயத்தை நிலைபெறச்செய்தார்.

இராமாநுஜருக்குப்பின் எழுந்த சமய இயக்கங்களிலெல்லாம் அப்பெரியாருடைய உள்ளக்கருத்துச் செறிந்திருக்கக்காணலாம். "மத்வாசாரியர், வல்லபாசாரியர், ஸ்ரீசைதன்னியர், இராமாநந்தர், கபீர், நானக் என்னும் பெரியார்களுடைய இயக்கங்களும், பிரமசமாஜம், என்னும் நிலையமும் ஸ்ரீஇராமாநுஜருடைய ஈசுவரவாதநெறிக்குப் பெரிதும் கடமைப்பட்டனவென ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் கூறுகிறார். தெற்குக் கானராவில் உடிப்பிதாலூகாவிலே கள்ளியன்பூர் என்னுமிடமே ஸ்ரீமத்வாசாரியர் பிறந்த இடமென்பர். இவர்காலம் கி. பி. 1197 முதல் 1277 வரையும் ஆகும். இவர் ஆநந்ததீர்த்தர் எனவும் பெயர்பெறுவர். ப்ரும்மசூத்திரங்களுக்கு, இவர் துவைதபாஷியம் எழுதினார். இவரது சிஷ்யராகிய நரஹரிதீர்த்தர் ஒரிஸ்ஸாமாகாணத்திலே உயர்ந்த பதவியில் இருந்தவர். ப்ரும்மசூத்திரத்திற்குச் சுருக்கமான உரையொன்றை எழுதிய தெலுங்கப்பிராமணராகிய நிம்பர்க்கர், ஸ்ரீராமாநுஜருடைய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவருடைய வேதாந்தம் அத்வைத துவைதங்களிரண்டினையும் தன்னுட்கொண்டதென்பர். இராமாநந்தர் பிரயாகையிலே பிராமணப்பெற்றாருக்கு மகனாக உதித்தார். இவர்காலம் கி. பி. 1300 முதல் 1411 வரை யாகும். திராவிடநாட்டிலே உதித்த பத்திமார்க்கத்தினை, இராமாநந்தர் வடக்கே கொண்டுசென்றாரென்றும், கபீர்தாஸர் அதனை ஸப்ததீவுகளிலும், நவகண்டங்களிலும் பரப்பினார் எனவும் கூறும் ஒரு நாட்டுப்பாடல் உளதென்பர். ஸ்ரீராமாநுஜரின் விசிஷ்டாத்வைத மதத்தினை உணர்ந்த போதகாசிரியராகிய இராகவாநந்தருக்குச் சீடராகிய இராமாநந்தர் விஷ்ணுபக்தர்களையெல்லாம் சமபந்தியிலே உண்ணும்படிசெய்ததனாலும், தேசபாஷையிலே மதப்பிரசாரம் செய்ததனாலும் சாதித்தடைகளை முழுதும் நீக்கிவிட்டார்.

ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒருவராகிய திருமங்கைமன்னன், திருவாய்மலர்ந்த பெரியதிருமொழி முதற்பத்திலே,

"குலந்தரும் செல்வந் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்"

என்றனர். இப்பாடலுக்கு உரைகண்ட பெரியார் 'குலந்தரும்' என்பதற்குப் பண்டைக்குலமொழிந்து தொண்டக்குலம் ஆதல் எனக் காட்டினாராதலின், தொண்டர்கள், தங்களுள்ளே குலநலம் ஆராயார்கள் என்பது பெறப்பட்டது. இவ்வுண்மையினை, இராமாநந்தர் சாதனையிற் கொண்டுவந்தாராதலின் முஸ்லீம்கள், பெண்கள், தீண்டாதோர் என்று இத்தகையோர்கள் அவருடைய சீடர்களாகி மதபோதனைசெய்யும் ஆசிரியர்களுமானார்கள். தெய்வம் ஒன்றே என்னும் உண்மையினையும் அத்தெய்வமே அனைவர்க்கும் பிறப்பிடம் என்னும் உண்மையினையும் இராமாநந்தர் உணர்ந்தார். ஆதலினாலே மண்பதை அனைத்தினையும் ஒரு பெரிய குடும்பமாகக் கண்டார். அத்தகைய காட்சி சாதி மத பேதங்களை முழுதும் ஒழித்துவிட்டது. ஆண்டவனுடைய திருவடிகளிலே சரண்புகுந்த தொண்டர், தமது பழைய வாழ்க்கையினை ஆண்டவனது திருமுன்னிலையிலே இழந்துவிட்டார்; ஆதலினாலே ஒரு புதியவாழ்க்கையினைத் தொடங்கப்பெற்றாரென இராமாநந்தர் கொண்டார். அவருடைய சீடர்களுள்ளே சக்கிலியராகிய இரவிதாசரும், இஸ்லாமிய நெசவுகாரராகிய கபீர்தாஸரும், உழவராகிய தன்னரும், நாவிதராகிய சேனரும், பத்மாவதியென்னும் பெண்ணும் சிறப்பெய்தியிருந்தனர்.

[தொடரும்]

ஸர் ஜே. ஜே. தாம்ஸனின் இளமைப்பருவம்

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.

[உச-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

நான் ஓவன்ஸ் காலேஜில் படித்துக்கொண்டிருந்த இரண்டாவதுவருஷத்திலேதான் முதன்முதல் பௌதிகசாஸ்திரப் பிரசங்கம் கேட்டேன். பால்பர் ஸ்டூவர்ட் (Balfour Stewart) என்னும் ஆசிரியர் பௌதிகசாஸ்திரத்தைப்பற்றி மிகவும் ரஸமாகவும் மிகவும் தெளிவாகவும் பேசினார். நான் சிறுவனாயிருந்தாலுங் கூட அவர் சொன்னது எனக்கு நன்றாக விளங்கிற்று. அவரைப் பார்த்தால் தொண்டுகிழம் மாதிரி இருந்தது. அவர் தலைமயிர் வெள்ளிபோல் நரைத்திருந்தது. வயதெல்லாம் நாற்பத்துமூன்று தான் என்று கேள்விப்பட்டேன். எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர் வேலையில் அமர்ந்த புதிதில் ஏதோ ஒரு ரயில்வண்டி விபத்தில் அகப்பட்டுக்கொண்டாராம். அதிலே பலத்த காயம் அடைந்தாராம். அவர் மறுபடியும் வேலைக்குவர ஒரு வருஷம் ஆயிற்றாம். பார்த்தால் கிழவராயிருந்தபோதிலும், அவருடைய புத்தி கெட்டுப் போகவில்லை; அது முன்போலவே மிகத் தெளிவாயும் சுறுசுறுப்பாயும் இருந்தது.

ஸர் ஹென்ரி ராஸ்கோ (Sir Henry Roscoe) அங்கே இரசாயன ஆசிரியராயிருந்தார். அவர் ஓவன்ஸ் காலேஜுக்கு வந்தபொழுது, அது தரித்திரம்பிடித்துக்கிடந்தது. பணம் கிடையாது; நல்ல கட்டடம் கிடையாது; அதிற் படிப்பவர்களின் தொகையும் மிகக்குறைவு. ராஸ்கோவும், அடால்பஸ் வார்ட் (Adolphus Ward) என்பவரும் செய்த முயற்சிகளால் அது மிகவும் மேலான நிலையை அடைந்தது. அவ்வூரிலுள்ள தாமஸ் ஆஷ்டன் (Thomas Ashton) என்னும் ஒருவருடைய துணையைக்கொண்டு அவர்கள் அவ்வூரிலுள்ள தனவான்களான பிரமுகர்கள் அனைவருடைய உதவியையும் பெற்றுப் போதிய பணத்தைத் திரட்டிவிட்டார்கள்.

ராஸ்கோ உலகப்போக்கு நன்றாகத்தெரிந்தவர்; மிக்க வசீகரத் தன்மை உள்ளவர்; அன்பாகப் பேசுபவர்; நல்ல நிதானமும் தெளிவும் சுறுசுறுப்பும் உள்ளவர்; பலரையும் தம்மோடு இணங்கச் செய்பவர்; புதிதுபுதிதான ஏற்பாடுகளை யோசித்துச் செய்பவர். உதாரணம் ஒன்று சொல்லுகிறேன். அவர் வேலைக்குவந்த புதிது.

அமெரிக்காவிலே உள்நாட்டுச்சண்டை தொடங்கி மிக மும்முரமாய் நடக்கிறது. அதனால் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குப் பருத்தி வந்துசேருவதற்கில்லை. போதிய பருத்தி இல்லாததால் மாஞ்செஸ்டரில் உள்ள பஞ்சாபீசுகள் அநேகத்தில் வேலை குறைந்துபோயிற்று. ஆகையால் ஏராளமான தொழிலாளிகளுக்கு வேலையில்லாமற்போய்விட்டது. அவர்கள்மேற் குற்றமில்லை. அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்கும்பொருட்டும், அவர்களுடைய பொழுதுபோக்கின் நிமித்தமும் ராஸ்கோ சாயங்காலவேளைகளிற் பலவகையான காலக்ஷேபங்களை ஏற்பாடுசெய்தார். சில நாளைக்குப் பாட்டுக்கச்சேரி. சில நாளைக்கு விஞ்ஞான விஷயங்களைப்பற்றிப் பிரசங்கங்கள்-சோதனைகளுடன். இப்படிப் பலமாதிரி. இந்த ஏற்பாடு வெற்றிகரமாக முடிந்தது. ஒவ்வொரு பிரசங்கத்துக்கும் நல்லகூட்டம் வந்தது.

இதைப்பார்த்துவிட்டு அவர் 'அணாப்பிரசங்கங்கள்' ஏற்படுத்தினார். பிரசங்கத்தை வந்து கேட்பதற்கு டிக்கெட் 'ஒரு அணா.' பிறகு அந்தப் பிரசங்கத்தை அச்சுப்போட்டுப் பிரதி 'ஒரு அணா' என்று விற்றார். முதலிலே எல்லாப் பிரசங்கங்களையும் அவரே செய்துவந்தார். பிறகு பற்பலதுறைகளில் நிபுணர்களான ஹக்ஸ்லி (Huxley), டிண்டல் (Tyndal), ஸர் ஜான் லப்பக் (Sir John Lubbock), பால்பர் ஸ்ட்டுவர்ட் (Balfour Stewart) முதலியோரைக்கொண்டும் பிரசங்கங்களை நடத்திவைத்தார்.

முதலிலே மாஞ்செஸ்டர்நகரத்தில்மட்டிலும்தான் பிரசங்கங்கள் நடந்தன. பிறகு, போகப்போக, லங்காஷயர், யார்க்ஷயர் மாகாணங்களிலே மில்கள் உள்ள ஊர்களிலெல்லாம் பிரசங்கங்கள் நடத்திவந்தார். சோதனைகளுக்கு வேண்டிய சாதனங்களைப் பெரிய பெட்டி ஒன்றிற் போட்டு ஊரூராகத் தூக்கிக்கொண்டுபோவார். அவரோடு துணைக்கு ஒரு ஆளும் போவான். இவற்றைப்பார்த்த ரயில்வே போர்ட்டர்கள் முதலியோர் அவர் பொம்மலாட்டம் நடத்திவருகிறார் என்றே எண்ணினார்கள். பதினொரு வருஷகாலம் ராஸ்கோ இவற்றை நடத்திவந்தபிறகுதான் இந்தப் பிரசங்கங்களின் பயனை ஸர்வகலாசாலையதிகாரிகள் உணர்ந்தார்கள். அதன்மேல் அவர்களும் சில தனவந்தர்களுமாக இதே மாதிரியான பிரசங்கங்கள் எப்பொழுதும் தொடர்ந்து நடக்கவேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்,

விஞ்ஞானசாஸ்திரங்களின் ஆவசியகத்தை ஜனங்கள் உணர வேண்டும், பள்ளிக்கூடங்களிலே அவைகள் கற்பிக்கப்படவேண்டும், நம்முடைய கைத்தொழிற்றுறைகளிலே அவை மேன்மேலும் பயன்படவேண்டும் என்று அவர் அரும்பாடுபட்டார். விஞ்ஞானத்தைக் கற்றுக்கொடுப்பதற்கும் விஞ்ஞான ஆராய்ச்சிநடத்துவதற்கும் வேண்டிய பணவுதவியைக் கலாசாலைகளுக்கு உதவும்படி அரசாங்கத்தைத் தூண்டினார். பணம் வாங்கியும் கொடுத்தார். அவர் ஓய்வென்பதையே அறியாதவராய் மிக மும்முரமாக முயன்று வந்தார். வியாசங்கள் எழுதியும், பிரசங்கங்கள் செய்தும், கமிட்டிகளில் உழைத்தும், அறிக்கைகளை வெளியிட்டும் அவர் செய்து வந்த வேலைகளுக்குக் கணக்கேயில்லை. ஓயாமல் ஜனங்களைத் தூண்டிக்கொண்டேயிருந்தார். இவ்வாறு ஒருவருஷமல்ல, இரண்டு வருஷமல்ல, நாற்பது வருஷகாலம் அவர் தீவிரமாக உழைத்ததன் பயனாக ஏதோ சில ஜனங்களிடையே இக்காலத்தில் விஞ்ஞான உணர்ச்சி பிறந்திருக்கிறது. இப்பொழுது எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் கொஞ்சங்கொஞ்சமாவது விஞ்ஞானம் கற்றுக்கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் நிறையவும் கற்றுக்கொடுக்கிறார்கள். நல்ல சோதனைச்சாலைகளும், அவைநிறையச் சோதனைக்கருவிகளும் இப்பொழுது இருக்கின்றன. முன்னாலே ஒன்றும் கிடையாது. இப்பொழுது இருப்பதுபோல ஆராய்ச்சிச்சாலைகள் கிடையா. ஆராய்ச்சிசெய்ய முன்வருபவனுக்குப் பணவுதவி கிடையாது. இப்பொழுது ஆராய்ச்சியின்பெருமை தெரிந்துவிட்டது. ஆராய்ச்சிக்காரர்களுக்கு இப்போது நல்லசம்பளம் கிடைக்கிறது. அநேகம் கம்பெனியார்களும் ஆராய்ச்சிநிபுணர்களைப் பணம்கொடுத்து வேலைக்கு அமர்த்திக்கொள்ளுகிறார்கள். அவர்கள் செய்யும் ஆராய்ச்சிகளால் கம்பெனிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன்.

துணிக்கைக்குட்டை ஒன்றைக் கையிற் கொஞ்சநேரம் வைத்துக்கொண்டிருந்தால் அது கசங்கிப்போகிறது. அதிலே சுருக்கங்கள் விழுகின்றன. என்ன தடவினாலும் சுருக்கங்கள் போவதில்லை. ஆனால், ஒரு கம்பளியை அதேமாதிரிக் கசக்கினால் அதிலேவிழும் சுருக்கங்கள் உடனே நீங்கிப்போகின்றன. பருத்தித்துணி கசங்குவதால் துணிச்சட்டைகள் சீக்கிரமாகக் கசங்கிப்போகின்றன. பார்ப்பதற்கு அவை நன்றாயிருப்பதில்லை. அதனால் துணிவியாபாரம்

குறைந்தது. மாஞ்செஸ்டர் நகரத்திலே பருத்தித்துணிநெய்து வியாபாரம் நடத்திவரும் டூட்டால், ப்ராடர்ஸ்ட், லீ கம்பெனியார் (Tootal, Broadhurst Lee Co.) இதை ஆராய்வதற்கு ஒரு விஞ்ஞானநிபுணரை ஏற்படுத்தினார்கள். பஞ்சுத்துணி கசங்கிப் போகாமலிருக்கும்படிசெய்வதற்கு வேண்டிய உபாயத்தைக் கண்டுபிடிப்பதுதான் அவர்கள் அவருக்கு இட்ட வேலை. அவர் பலவருஷகாலம் ஆராய்ச்சிகளை நடத்தினார்; ஏராளமான பணச் செலவுசெய்தார். அவர்கள் பணங்கொடுத்தார்கள். கடைசியாக அவருடைய முயற்சி வெற்றியடைந்தது. கசங்கிப்போகாத துணிகள் இப்பொழுது நெய்யப்படுகின்றன. மற்றக் கம்பெனிகள் கைதாழ்ந்துபோன இந்தக்காலத்திலுங்கூட அந்தக்கம்பெனியின் வியாபாரம் நன்றாக நடக்கிறது.

நான் ஓவன்ஸ் காலேஜுக்குப் போனபோது அங்கே மூன்று வருஷம் படித்துவிட்டுப் பிறகு எஞ்ஜினியரிங் தொழிலுக்குப் போவதாக ஏற்பாடாகியிருந்தது. பிறகு இது மாறிவிட்டது; ஏனென்றால், இரண்டாம்வருஷம் நான் படித்துக்கொண்டிருக்கும் போது என் தகப்பனார் இறந்துபோனார். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்தொன்பதுதான். அவர் இறந்துபோனபடியால் எஞ்ஜினியரிங்தொழிலுக்கு முன்பணமாகக் கட்டவேண்டிய பணம் எங்களுக்குக் கிடைப்பதற்கு வழியில்லை. எனக்கு ஏதோ காலேஜிலே கிடைத்த அற்ப சொற்பமான உபகாரச்சம்பளத்தைக்கொண்டு நான் மேலே படித்துவந்தேன். மொத்தம் ஐந்துவருஷகாலம் அந்தக் காலேஜிலே படித்தேன்.

[மேற்கூறியவாறு, மின் அணுவின் தன்மைகளை முதன் முதலில் வெளியிட்டவராயும் இணையற்ற பௌதிகசாஸ்திர நிபுணராயும் உள்ள ஸர் ஜே. ஜே. தாம்ஸன் தாம் எழுதிய ‘நினைவுகளும் சிந்தனைகளும்’ (Recollections and Reflections) என்னும் புத்தகத்திலே சொல்லுகிறார். புத்தகம் படிப்பதற்கு மிகவும் நன்றாயிருக்கிறது. எல்லாரும் படிக்கவேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் இருக்கிறது. நம்முடைய நாட்டு அறிவாளிகள் தங்களுடைய அநுபவங்களை நம் நாட்டுப் பாஷையில் எழுதினால் எவ்வளவு நன்றாயிருக்கும்? எழுதமாட்டேன் என்கிறார்களே!]

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

௪௦-ஆம் தொகுதியின் ௪௦௪-ஆம் பக்கத் தொடர்ச்சி

௧௫-வது இலவணன்வதைப்படலம்

இராவணனுடைய சிறியதாயின்மகனான இலவணனைச் சத்துருக்கன் கொன்றதைக் கூறுவது.

இராமன் அரசநீதி கூறல்

(சீதைபிரிவால் நேர்ந்ததுன்பம் ஆறும்படி இலக்குமணன் கூறியதைக் கேட்டுத் தேறிய) இராமன், (அத்துன்பம் மறந்தொழியும்வண்ணம்) 'நம்நாட்டாருக்குச் சேமம் விருத்தியாகும்படி இராசநீதிசெலுத்தும் முயற்சியில் ஈடுபடுவோமாக. கோபத்தோடுகூடிய மனத்தினனாய்ப் பழிக்கஞ்சாமல் கொடுங்கோல் செலுத்தி, ஆறிலொன்றுக்கதிகமாக வரிகொண்டும் அரசனுடைய (நாட்டைக்காட்டிலும் "கடும்புலிவாழும் காடுநன்"றென்று கருதாது அந்த) நாட்டில் வாழ்பவர் மூடர்களே. தண்டனைக்குரியவரைத் தண்டியாமல் தண்டிக்கத்தகாதவரைத் தண்டிக்கும் அரசன், கொடியோரைத் தண்டிக்கும் கூற்றுவனால் தண்டிக்கப்படுவான்' என்று இலக்குமணனுக்கு இராசதருமம் கூறினான். (பின்பு, தன்கடமையைச் செய்யாத அரசன் தண்டனையடைவானென்பதை விளக்க, நிருகனென்னும் அரசன்சரிதத்தைக் கூறுகின்றான்:—)

நிருகன்சரிதம்

'கோடிகோடியாகக்கொடுக்கும் பெருங்கொடைவள்ளலான நிருகனென்னும் அரசன், ஒரு பிராமணனுக்கு ஒரு பசுவைத் தானஞ்செய்தான். அந்தப்பசு தப்பிவந்து, அரசன் பசுக்கூட்டத்திலே கலந்துவிட்டது. அப்படிக் கலந்ததை அறியாமல், அவன் அதே பசுவை வேறொரு பிராமணனுக்குத் தானஞ்செய்தான். அதனை, முன் தானம்பெற்றவன், தேடித்திரியும்போது, பின் பெற்றவனிடமிருப்பதைக் கண்டான். அப் பசு காரணமாக இருவரும் விவாதம் செய்து, முறைபிடுதற்காக அரசனுடைய அரண்மனையை

அடைந்தவர்களை நெடுங்காலம் காக்கவைத்ததனால், அவர்கள் கோபித்து அவனைப் பச்சோந்தியாகும்படி சாபங்கொடுத்து, "நீ பச்சோந்தியாய் ஒருகிணற்றிலே தலைகீழாக இரண்டுயுகங்கள் தொங்கியபின்பு, துவாபரயுகத்தில் திருமால் கண்ணபிரானாக அவதாரஞ்செய்தபோது, அப்பெருமானுடைய அருட்கண்பார்வையால் சாபம் நீங்கப்பெறுவாய்" என்று சாபவிடுதலையுங்கொடுத்துப் போனார்கள். போனவர்கள், விரதப்பசுவை ஒரு முனிவனுக்குக் கொடுத்துச் சமாதானமானார்கள். அவர்கள் சபித்தபடியே, நிருகன் பச்சோந்தியாகிக் கிணற்றிலேவிழுந்து தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தான்' என்று கூற, 'இந்தச்சரிதம் ஆச்சரியமாயிருக்கிறது' என்று இலக்குமணன் கூற, 'இதனினும் ஆச்சரியமான கதையொன்று கூறுகிறேன், கேள்' என்று இராமன் கூறுகின்றான்.

நிமி சரிதம்

'நிமியென்னும் அரசன், நெடுங்காலம் அரசாண்டபின் துறவியாகி வனத்துக்குச்சென்று தவஞ்செய்யுங்காலத்திலே சத்திரயாகம் செய்யக்கருதி வசிட்டன் முதலிய சில முனிவரை வரவழைத்து அந்த யாகத்தை நடத்துவிக்கும்படி வேண்டினான். வசிட்டன், 'ஒரு யாகத்தை நடத்தும்படி இந்திரன் என்னை முன்னமே வேண்டியிருக்கிறான். அந்த யாகத்தை முற்றுவித்தபின் வருவேன்' என்று கூறிப் போனான். நிமி, கோதமமுனிவனைக்கொண்டு தான் குறித்த யாகத்தை நடத்தச்செய்தான். அப்போது, இந்திரன்யாகத்தை முடித்துத் திரும்பிவந்த வசிட்டன், கோதமனைக் கொண்டு செய்விக்கப்படுகின்ற யாகத்தைக்கண்டு கோபங்கொண்டு 'இதன் காரணத்தையறிவேன்' என்று நிமியிடஞ்சென்றபோது, அவன் உறங்கிக்கொண்டிருந்தான். "யாகஞ்செய்விக்க முன்பு என்னை வேண்டிப் பின்பு வேறொருவனைக்கொண்டு செய்பவன், நான் காணவந்தபோது வெளிப்படாதிருக்கின்றான். இவன் ஆவி, இவன் உடலினின்றும் பிரிவதாகுக" என்று சபித்தான். அவன் சபிக்கக் கேட்ட நிமி, "தன்வரவையறியாது உறங்கிக்கொண்டிருந்த என்னைச் சபித்தவன்சாபம், அவனையும் பற்றக்கடவது" என்று எதிர்சாபமிட்டான். இருவராவிகளும் பிரிந்துதிரியுங்காலத்தில், வசிட்டனுடைய ஆவி பிரமனையடைந்து "நிமிசாபத்தால் உடலைவிடலானேன். திரும்ப உடலடையும்படி அருள்புரிவாயாக"

என்று வேண்ட, "உருப்பசிமீது காதல்கொண்டு மித்திரன் வருணன் என்பாரிருவரும் வெளிவிடும் வீரியத்திற் புகுந்து (அயோனிசனாய்—மாதர்யோனிவாயிலாகப் பிறவாதவனாய்க்) கும்பசம்பவன் (-குடத்திலிருந்து பிறப்பவன்) ஆகுவாயாக" என்று பிரமன் கூறினான்.

மித்திர வருணர் வீரியங்களில் அகத்திய வசிட்டர்கள் பிறத்தல்

வசிட்டன் ஆவி, கடலையடைந்தது. அங்கே மற்றத் தேவமாதரோடு நீர்விளையாடல்செய்துகொண்டிருந்த ஊர்வசியைக் கண்டு காதல்கொண்டு, வருணன், அவளுக்குத் தன்காதலை அறிவித்தபோது, அவள், "உனக்குமுன்னே மித்திரன், என்னைக் காதலித்திருக்கிறான். ஆதலால் நீ காதலிப்பது தவறு" என்றுகூற, அவன், 'காமவெங்கனலால் உருகி வீரியம் விழுந்ததைக் குடத்திலே இடுகின்றேன்' என்றுகூற, அவள், அவன்பால் அன்புடையளாய் மித்திரனை அணுகினாள். அவன் கோபங்கொண்டு, "நான் முன்னமே உன்பால் அன்பு செய்திருக்க, நீ அன்னியன்பால் அன்புடையளானாய். ஆதலால், நீ விண்ணுலகத்தைவிட்டு மண்ணுலகையடைந்து புதன்மகன் புரூரவனுக்கு மனைவியாகி நெடுநாளிருப்பாயாக" என்று சபித்தான். வருணன் வீரியத்தை வீழவிட்ட கும்பத்திலே, ஊர்வசியைக் காதலித்து மித்திரன் வீழ்த்த வீரியம் விடப்பட்டிருந்தது. அந்தக் கும்பத்திலிருந்து அகத்தியனும் வசிட்டனும் பிறந்தார்கள்' என்று இராமன் கூறக் கேட்டு மிக்க வியப்படைந்து, 'நிமியின் ஆவி யாதாயினது? அவன் தொடங்கிய யாகம் எப்படி முடிந்தது? என்று விவரமாகச் சொல்வாயாக' என இலக்குமணன் வேண்டினான். '(அரசனாயிருந்து துறவியான) நிமியினுடைய ஆவி பிரிந்த உடலை அவனுடைய சீடர்கள் ஆடையாபரணங்களால் அலங்கரிப்பித்து அதன் தன்மை கெடாதபடி ஐயாயிரமாண்டு பாதுகாத்துவைத்திருந்தனர். அவன் தொடங்கிய யாகத்தை முனிவர்கள் முற்றுப்பெறச்செய்தனர். அப்போது தேவர்களெல்லாருங்கூடி அந்த நிமியின் ஆவியை அழைத்து, "உனக்கு வேண்டியதைக் கேள்" என, "இந்தப் பூமியிலுள்ளாரெல்லார்கண்களிலும் (பாவையாக இயங்கும் வரம்வேண்டும்" எனத் "தந்தோம்" என்று கூறித் தேவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். பின்பு முனிவர்கள், நிமியின்

உடலை அரணி (—தீக்கடைகோல்)கொண்டு கடைய, அந்த உடலினின்று சனித்தவனை அவர்கள், 'சனக'னென்று பெயரிட்டுப் "பூமியை ஆள்வாயாக" என, அவன் ஆள்வானானான். தவம், கல்வி, அறிவு, உண்மை ஆகியவைகளாலுயர்ந்த மேற்கூறியவர்கள் கோபங்காரணமாக மேற்கூறியவாறு சிறுமைபடைந்தார்கள். புறப்பகையை வெல்லுதல் சாத்தியம். அகப்பகையாகிய கோபத்தை வெல்லுதல் அசாத்தியம். அதனை வென்றவர் எவருமில்லை.* மூங்கிலில் உண்டாகிய தீ மூங்கிற்காட்டை மூலம் அற முழுதும் அழித்தல்போல ஒருவன் மனத்துள்ளே பிறக்கும் கோபத்தீ அவனையும், அவன் சுற்றத்தாரையும் அழித்திடும். அதன் கடுமையை அறிந்தவர்கள் அதனைப் பொறுமையால் அடக்க முயன்றும் அடங்காது. உட்பகைகளிலே கோபத்தீயை ஒப்பதுவேறொன்றுமில்லை.† இன்னும் கோபம் மிகுந்தோர்கதைகளைக் கூறுகின்றேன்; கேள்' என்று இராமன் கூறுகின்றான்:—

---

*ஒள்ளிய தவத்தாற் கல்வியாலுணர்வாலுண்மையாலுணர்ந்தவருயர்ந்தோர்
எள்ளிய குற்றம் இல்லவர் எய்தும் வெகுளியால் இப்படிப் பட்டார்
தெள்ளிய வீரச் சிலையினுய்! புறத்துத் திறற்பகை வெல்லலாம்; சினமாம்
உள்ளுறு பகையை வென்றவ ரிந்த வுலகத்தில் ஒருவரும் இல்லை.
(இப்படலம் உஅ.)

ஒள்ளிய - பிரகாசமான. எள்ளிய - தாழ்வான. வெகுளி - கோபம். இப்படிப் பட்டார் - மேலேகூறியவாறு துன்பப்பட்டார்கள். சிலை - வில். திறல் - வலிமை (உடைய). சினம் - கோபம். உள் உறு பகை - உட்பகை - அகப்பகை. 4-ம் அடி சங்கத்து ஏட்டுப்பிரதியிலுள்ளவாறு பதிக்கப்பட்டது. அச்சுப்புத்தகப்பாடத்தினும் இதுவே அமைவுடையதாகும்.

† மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கில் முதலற முருக்குமா போலத்
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து தன்னுறு கிளையெலாம் தீக்கும்
ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா லதனையுள் ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு முட்பகை யுலகில்வே றுண்டோ?
(இப்படலம் உகூ)

முருக்குதல் - அழித்தல். முருக்குமாறு - அழிக்கிறபடி. கிளை - சுற்றம். கமை - பொறுமை. சயிக்கும் என்று அச்சுப்பிரதிகளிற் காணப்படினும், சங்கத்து ஏட்டுப்பிரதியிலுள்ள தீக்கும் என்ற பாடம் சிறக்கும். ['தகிக்கும்' என்றிருப்பின் மோனைநயமும் அமையுமாயினும் அவ்வாறு ஏட்டுப்பாடம் காணப்படவில்லை.]

யயாதி சரிதம்

'இந்திரபதவியையடைதற்குரிய நூறு அசுவமேதயாகங்களைச் செய்துமுடித்த நகுடனுடைய மகனும் இந்த அயோத்திமா நகரத்தரசனுமான யயாதிக்குச் சன்மிட்டை தேவயானியென இரண்டு மனைவியர் இருந்தனர். முன்னவள் பூருவென்பவனையும் பின்னவள் யதுவென்பவனையும் பெற்றார்கள். இருவரும் வளர்ந்து வரும்போது ஒருநாள், யது, கண்களிலே சோகக்கண்ணீரும் கோபத்தீயும் ஏககாலத்திற் பொங்கத் தன் தாய் தேவயானியிடம் சென்று, "என் தந்தை, உன் சக்களத்தி சன்மிட்டையைக் கொண்டாடி, அவள்மகன் பூருவை ஆதரித்து, அன்புடன் அரவணைத்து (-தழுவி), நான் உன்மகனென்ற கோபத்தால் என்னை அனுதரவு செய்து அதட்டுகின்றான். இந்த யயாதிக்குப் பெண்டாட்டியும் பிள்ளையுமான பாவம் தீர நாமிருவரும் கொடுந்துன்பம் அனுபவித்தோம். (இதுவரை பட்ட துன்பம் போதும். இனி, மானத்தைக் காக்க உயிரை விட்டுவிடவேண்டும்.) கவரிமான்கள் ஒருமயிருக்குத் தீங்குநேர்வதாயிருந்தாலும் அது நேராமல் மானங்காக்க, உயிர்விடுதலைக்கண்டிருந்தும் ஏன் (சாகத்)துணிகின்றாயில்லை" என்று கூறினான்.

அவள், மிக்க கோபமும் பொறாமையும் கொண்டு, கண்ணீர் பெருக, வாயிதழ் துடிக்க, மகனுடன் தன் தந்தை சுக்கிரனிடம் போய்க் காலில் விழுந்து, "அரசன், என் சக்களத்தி சன்மிட்டைபால் வைத்த ஒருதலைச்சார்பான (-பட்சபாதமான) அன்பினால், அவள்மகனை அரவணைத்துத் தழுவி, என்மகனைக்கண்டால் என்னைக்கண்டாற்போல எரிந்துவிழுகின்றான். இந்தத்துன்பத்தை நாங்கள் பொறுக்கமுடியவில்லை. தீயில் விழுந்து செத்துப்போவோம்" என்று கூறினாள். அதனைக் கேட்ட சுக்கிரன், மனம் பதைபதைக்கப் புருவங்கள் துடிக்கக் கண்கள் சிவந்து சுழலக் கோபங்கொண்டு, "என்மகளுக்கு இப்படிப்பட்ட துன்பம் உண்டாக்கிய யயாதி, இளமைப்பருவத்தையிழந்து, பெண்கள் கண்டு சிரிக்கும்படி கிழப் பருவம் அடைவானாகுக" என்று சபித்தான்.

யயாதி, சுக்கிரசாபத்தால், வில்லைப்போல மேனி கூனி, தோல் சுருங்கி, மயிர் வெளுத்துக் கண்ணீரொழுக, நாக்குக் குழறப் பற்கள்

அசையத் தொண்டை இருமக் கிழப்பருவமுற்று, மனத்துயர மடைந்தான்.

அவன், யதுவை அணுகி, "என்மூப்பை நீகொண்டு, என் மூப்புநோயைத் தீர்ப்பாயானால், என்மனதிற்கொண்டுள்ள விருப்பங்களை நிறைவேற்றிச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்து முடித்து, உன்னிடம் கொடுத்த மூப்பைத் திரும்பப் பெற்றுக் கொள்வேன். முதுமையடைந்த ஆலமரம் சாய்ந்துவிழுந்திடாமல் அதன் விழுதுகள் தாங்குதல்போலத் தந்தையர் தளராதபடி மைந்தர்கள் தாங்குவார்கள். புத்திரனுவான், (தந்தைதாயன்றிக்) குலத்துள்ளாரெல்லாரும் நரகமுறாமல் நற்கதியடையச்செய்வானென்று பெரியோர் சொல்வார்கள். என் மூப்புநோயை மாற்றுவாயாக" என்று வேண்டினன். "நீ, உன் அருமைமகனேடு (பூருவோடு) உடனிருந்துண்ட அப்போது யாதோருரிமையுமில்லாதிருந்த எனக்கு, இப்போது என்ன உரிமை உண்டாயிருக்கிறது, உனக்குற்றதுன்பம் நீங்கும்படி அதனை நான் வாங்குதற்கு?" என்று யது கூறினன்.

யயாதி, பூருவை அடைந்து "என் கொடிய மூப்புநோயை நீ கொண்டு என்வேதனையை நீக்குவாயோ?" எனப், பூரு, "என் தந்தை என்னை நோக்கி 'என் துன்பத்தை நீக்குவாயா?' என்று சொல்லக் கேட்கப்பெற்றதனுல், நான் பெருவாழ்வு பெற்றவனுனேன். இந்தப் பூலோகத்திலே என்னை நேர்வார் யாருமில்லை" என்று சொல்லி, யயாதியின் முதுமையை வாங்கிக்கொண்டு, தன் இளமையைக் கொடுத்தான். அப்போது, யயாதி, (தன்விருப்பப்படி செய்யாத) யதுவை நோக்கி, "நீயும் உன்மகனும் *ஆசுரபாவம் அடைக" என்று சபித்தான். பின்பு, பூருவுக்கு மகுடம் சூட்டித் தவஞ்செய்ய வனஞ்சேர்ந்தான். இவ்வாறு கோபிகள் கெடுதல் உண்மை' என்று இராமன் கூறினன். அப்போது சாயங்காலமாக, அவன் சந்திவந்தனையை முடித்து இராப்போசனஞ்செய்து பள்ளியிலமர்ந்தான்.

[தொடரும்.]

---

* ஆசுரபாவம் - அசுரத்தன்மை.

ஸ்ரீ:

சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா.

மாட்சிமைதங்கிய மன்னர் ஸ்ரீமத். ஹிரண்யகெர்ப்பயாஜி ரவிகுல முத்துவிஜய ரகுநாத ஸ்ரீ. ரா. ஷண்முகராஜேஸ்வர நாகநாதசேதுபதியவர்களது 35-வது வெள்ளணிநாள்விழா, இவ்வாண்டின் ஐப்பசித்திங்களில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றுச் சாகரஞ்சூழ் நன்னாட்டின் முன்னாட்டும் நலம்வாய்ந்த இச்சேதுநாட்டின் திருமுகமாய்த்திகழும் தலைநகராகிய முகவையம்பதியை இருபதிற்றுநான்குநாட்கள் பெருங்களிப்பிடைத் திளைப்பித்தது. சேதுவளநாட்டுக் குடிமக்கள்சார்பில் ஏற்பட்டதும், இராமநாதபுரம் எஸ்டேட்டுமானேஜர் ஸ்ரீமாந். ராவ்பஹதூர் J. பாலாஜிராவ் B.A. அவர்களைத் தலைவராகக்கொண்டதும், அரசர்மரபினர்களும் பிற உயர் பெருமக்களுமாகிய பல பிரமுகர்கள் அடங்கியதுமான ஒரு பெருங்கழகம் இவ்விழாவை இத்துணைச் சிறப்புமுறையிற் பலரும் வியந்து பாராட்டும்படி நடைபெறுவித்தது. இவ்விழாவின் முக்கியமான சில அமிசங்கள் இங்குக் குறிப்பிடப்படும்.

இக்கொண்டாட்டத்தின்சார்பில் அக்டோபர்மாதம் 20-ஆம் தேதி தொடங்கிப் பலநாள் நிகழ்ந்த மற்போர் சிலம்பம் முதலான பழமையானவும், காற்பந்து முதலான பலபல புதுமைவாய்ந்தனவுமாகிய ஆடல்கள் நகரெங்கும் பெருமகிழ்ச்சியும் கிளர்ச்சியும் நிலவும்படி செய்தன.

செந்தமிழ்ச் சேதுவேந்தரவர்களது சென்மநாட்கூடிய ஐப்பசித் திங்கள் 10-ஆம் தேதி (27-10-43௳.) சேதுநாட்டைச்சேர்ந்த சிறியனவும் பெரியனவுமாகிய தேவாலயங்கள் பலவற்றிலும் சிறப்புமுறையிற் பூசனைகள் செய்விக்கப்பெற்றன. மற்றும், அன்று அரண்மனையிற் பல மறையோர்சூழ மன்னரவர்கட்கு ஆயுஷ்யஹோமம் நடைபெற்றது.

நவம்பர்மாதம் 5-ஆம் தேதியன்று மாலையில், பாளையம்பட்டி ஜமீன்தாரவர்களது அரண்மனைமுன்றிலின்கண்ணே குழுமிய பெருந்திரளிடையே சேதுவேந்தரவர்கள் மன்பதைக்கும் மன்னற்குமிடையே ஒத்த நல்லுணர்ச்சி உறுதியாக நிலவுவதனாலாகும் சிறப்பையும், தாம் இவ்விழாவைச் சேதுநாட்டு மன்பதைகளின் விழாவாகக்கொண்டாடும் மாண்பையும், உழவு கைத்தொழில் கால்நடை இவற்றைப் பேணுவதன் ஆவசியகத்தையும், அவற்றோடியைந்த பொருட்காட்சிகளை இவ்விழாக்காலையில் ஏற்படுத்தியதன் தகுதியையும் விளங்க விரித்துரைத்துப் பின்னர் அப்பொருட்காட்சிகளைத் திறந்துவைத்தனர். எஸ்டேட்டு மானேஜரவர்கள் தலைமைவகித்து ஓ ரரிய

பேருரை வழங்கினர். உழவு கால்நடை யிலாகாக்களைச் சார்ந்த உத்தி யோகத்தர்கள் அவ்வவற்றின் அபிவிருத்தியைக் குறித்த அரிய சொற் பொழிவுகள் ஆற்றினர்.

மறுநாட் பகலில் ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் உணவளிக்கப்பெற்ற துடன் மன்னர்கரத்தால் ஆடையும் வழங்கப்பெற்றனர். இதற்குரிய பெரு நிதி அரசரது தர்மமஹமைநிதியிலிருந்து பெறப்பட்டது. அன்று மாலையில், தொன்முதுவிழுச்சீர்மன்னியதான இராமலிங்கவிலாசமண்டபத்தில் உரிய முறையில் நிகழ்ந்த செந்தமிழ்ச் சேதுவேந்தரது ஓலக்கம் கண்கொளாக் கவின்பொழிகாட்சியதாயிற்று. அவ்வமயத்தில் மன்னரவர்கள் 'எனது இம்முப்பத்தைந்தாவது வெள்ளணிநாள்விழாக்காலத்தில் மக்களிடை இயற்கையாகத் தோன்றியுள்ள மகிழ்ச்சி என்னைப் பரவசப்படுத்துகிறது. எல்லாப் போர்முனைகளிலும், நேசதேசங்கள் பெற்றுவரும் வெற்றி நமக்கு அளவிலா ஆநந்தத்தைக் கொடுக்கிறது. எனினும், பூரணவெற்றி தாமத மின்றி யேற்படவேண்டுமென்பது எனது மனப்பூர்வமான பிரார்த்தனை. மக்கள் துன்பங்கள் குறைய வெற்றியை விரைவிற்பெறும் உயரியநோக்கத் துடன், கடவுளிடத்து நம்பிக்கைவைத்தும் நம்முடைய திடமனத்தைக் கடைப்பிடித்தும் நம்சக்திகள் அனைத்தையும் வரையாது உபயோகிப்போ மாக. உலகத்தை மிக்க துயரத்தில் ஆழ்த்தியிருக்கும் தீவினைகளை அழிப்ப தில் யான் கொண்டுள்ள பிரதிக்ஞையை ஈண்டு மீண்டும் எடுத்துரைப்பது மிகையாகும். உணவின்மையால் வருந்தும் மக்கள்பால் நாம்கொண்டுள்ள அநுதாபம் இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள துக்க நிவாரணவேலைகளில் நாம் எல்லாவகையாலும் ஈடுபடுமாறும், இவ்வுணவு நெருக்கடியைத் தீர்க்க அதிகமான உணவுப்பொருள் உற்பத்திசெய்யுமாறும் மீண்டும் சங்கற்பம்செய்துகொள்ளும்படி நம்மைத் தூண்டுகிறது. இதனினும் மேலான சமூகசேவை யிருக்கமுடியாது. இவ்வித அறப்பணியில் ஈடுபடப் போதியவலிமையை நமக்கு இறைவன் அளிப்பானாக' என்னும் செய்தியை வெளியிட்டனர்.

அடுத்தநாட் காலையில் அரசரவர்கள், தம் ஸமஸ்தான உத்தியோகஸ் தர்கட்கும் தம் நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் வந்திருந்த நாட்டாண்மை யாளர்கட்கும் பிற குடிமக்கட்கும் இராமலிங்கவிலாச ஓலக்கமண்டபத்திற் காட்சி வழங்கினர். அவ்வமயத்தில் இராமேசுவர நகரமாந்தர், சேதுபதி யவர்களது பிறந்தநாட்கொண்டாட்டத்தை அம்மன்னரவர்களது சென்ம நாளிலே தாம் தனியாகக் கொண்டாடி அப்பொழுது தீர்மானித்தபடி அனுப் பப்பெற்ற உபசாரப்பத்திரமொன்று, தேவை யிராமீசர் தேவாலயத்தின்

டிரஸ்டியாகிய திரு. ஆறுமுககவிராஜ் அவர்களால் மன்னரவர்கட்குப் படித்தளிக்கப்பெற்றது. அதன்பின்னர் முதுகுளத்தூர்வாசிகள் அன்போடு சமர்ப்பித்த உபசாரப்பத்திரமொன்றும் அங்ஙனம் வாசித்தளிக்கப்பட்டது. அவற்றை அரசரவர்கள் உவந்தேற்றுக்கொண்டு உரிய உத்தரங்கள் பகர்ந்தனர். இராமேசுவரநகரத்தார் தம்பாற்கொண்டுள்ள தனிப்பட்ட விசுவாசத்தின் மிகுதியைப் பாராட்டித் தம்மரபினர்க்கும் அந்நகருக்குமுள்ள இடையறவுபடாத தனித்தொடர்பையும் குறித்துவிட்டு, முதுகுளத்தூர்வாசிகள் தம்பால் வேண்டிக்கொண்டவை முன்னரே தம் கருத்தை யீர்த்துள்ளதாகவும் காலத்தை நோக்கியிருப்பதாகவும் அப்பொழுது கூறினர். அதனுடன் அவர்கள் தமக்கும் தம் குடிமக்கட்குமிடைக் கிடக்கும் தொடர்பை விளக்கியும், இருபாலார் ஆக்கமும் வளர்வதற்கு இருபாலாரும் ஒருவர் மற்றவர்பாற் கொள்ளவேண்டிய மனப்பான்மைகுறித்து விரித்தும், தாம் மன்னுயிர் நலனே மாண்புற மதித்துப் பேணும் பணியாளனாதலை நன்குணர்ந்து அதனிடத்து வேணவாக்கொண்டுநிற்கும் விழுப்பெருந்தகைமையை வற்புறுத்தி வெளியிட்டும், குடிமக்கள்தம்பால் வேண்டுவனசெய்யத் தாம் மடிதற்றுநிற்கும் மாட்சியை வரைந்தும் வழங்கியதோர் நல்லுரை வந்தவர் பலரையும் சிந்தைகுளிரச்செய்தது.

அன்று மாலையில் வைசிய இளைஞர்சங்கத்தார் இராமநாதபுரத்து வெளிப்பட்டணத்திலமைந்த தங்கள் சங்கத்தில் அரசரவர்களை அழைத்து உபசரித்தனர். அவ்வமயத்தும் அரசரவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றினர். இளைஞர்களே வருங்கால ஆக்கத்திற்குரியவராவராதலால் இளைஞர்சங்கங்கள் சமூகமுன்னேற்றத்திற்கு யாண்டும் வேண்டுவனவேயென்றும், ஒரு சமூகத்தின் ஒருபகுதியினர் மற்றையோர் கேடுற வாழ்வது இயலாததென்றும், ஒவ்வொருவர்நலனும் பிறர்நலத்தோடு பிணைந்துள்ளதென்றும், வாணிபர் இவ்விதிக்கு விலக்காகமாட்டாரென்றும் முக்கியமாக அவ்வுரையிடை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறே இதன் பிற்றைநாள்மாலையில் இராமநாதபுரம் தாலூகா முகம்மதியசங்கத்தார் தம்மை யழைத்து உபசரிக்க, வேந்தரவர்கள் அவர்களது அன்பைப் பாராட்டி நாடு நலனழியாது மேலும் ஆக்கம்பெற்று ஓங்குதற்கு அதன் மக்களிடையே ஒற்றுமையுணர்ச்சி சமயமுதலியவற்றால் தடைபட்டு அழியாது உலவவேண்டியதனை விளக்கியுரைத்தனர்.

பிற்றைநாளாகிய நவம்பர்மாதத்து 9-ஆம் நாள் ஆங்கிலவருடமுறையிற் சேதுமன்னரது பிறந்ததினமாகும். அன்று கிறிஸ்தவர்கோயில்களிலும் முகம்மதியர்பள்ளிகளிலும் பிரார்த்தனைகள் நிகழ்ந்தன.

அற்றைநாளின் முற்பகலின்கண்ணே, கலைவளர்செல்வச்சேதுவேந்தரது இருக்கையிற் சிறக்க நிகழ்ந்த புலவர்சபை குறிக்கத்தக்கது. ஸேதுஸமஸ்தானம் மஹாவித்துவான் பஷாகவிசேகரர் ஸ்ரீமத். ரா. இராகவையங்கார்சுவாமிகளும் சேதுஸமஸ்தான வித்வத் பரம்பரையினர் ராவ்ஸாஹெப் ஸ்ரீ மு. இராகவையங்கார்சுவாமிகளும் முதலான செந்தமிழ்ப்பாவலர்களும், வடமொழிக்கவிஞரும் ஆங்கிலம் வல்லுநரும் ஹிந்திமொழியினருமாகிய பலபண்டிதர்களும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து உபதலைவர் ஸ்ரீமாந். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், காரியதரிசி ஸ்ரீமாந். N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், எஸ்டேட் மானேஜரவர்களும் முதலான பல அறிவுடைப் பெருமக்களும் அவையை அலங்கரித்தனர். புலவர்களால் இயற்றப்பட்ட நாண்மங்கலக்கவிகள்* படித்துப் பொருள்விரித்து மன்னர்க்களிக்கப்பட்டன. மன்னரவர்களும் அவற்றை மகிழ்ச்சியோடேற்று மரியாதையும் வழங்கினர். இக்கூட்டம் வந்தவர்யாவர்க்கும் அளவிலா ஆநந்தமளித்துப் பாராட்டுக்குரியதாயிற்று.

செவியுணவாகிய இவ்விருந்து நிகழ்ந்தபின்னர், அவியுணவினருடைய அமுதவுணவென்னும்படியமைந்த அறுசுவையுண்டிகொள்விருந்து நன்முறையில் நடைபெற்றது.

அன்று மாலையில் இராமலிங்கவிலாசத்தின் முன்றிலில் ஒரு பொதுக்கூட்டம் சேதுவேந்தரவர்களது தலைமையில் நடைபெற்றது. அவ்வமயத்தில் இவ்விழாவின் காரியக்கழகத்தலைவரான இராமநாதபுரம் எஸ்டேட்டு மானேஜரவர்கள் இவ்விழாவைக்குறித்து விரிவாக அழகியதோர் சொற்பொழிவாற்றினர். அதன்பிறகு பற்பல பகுதிகளிலுமிருந்து விழாவையும் மன்னரவர்களையும் பாராட்டியும் வாழ்த்தியும்வந்த செய்திகள் விழாவின் பொதுக்காரியதரிசி திரு. S. நரசிம்மையங்காரவர்களாற் படிக்கப்பெற்றன. பின்னர் இவ்விழாவின் காரியக்கழகத்தின் உபதலைவரும், சேதுஸமஸ்தானத்தைச் சார்ந்தவரும், மூன்று தலைமுறையாகச் சேதுவேந்தர்களோடு நெருங்கிய தொடர்புகொண்டவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்து உபதலைவரும் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞருமாகிய ஸ்ரீமாந். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இச்சேதுஸமஸ்தானத்தின் பழமையையும், அதன் மன்னர்கள்பாற் காணப்பட்ட குடியோம்பல் கொடை நாடு தலையளித்தல் முதலான இறைமாட்சிகளையும், ஒப்புரவுகளையும், பிற அறச்செயல்களையும்,

---

* இக்கவிகளுட் சில பின்னர்ச் சேர்க்கப்பெற்றுள்ளன.

ஆட்சித்திறமையையும் பல எடுத்துக்காட்டுக்களுடன் விரித்துக்காட்டிய தோடு பாற்கரசேதுபதி முதலாகவந்த மூன்று மன்னர்களிடைத் தாம் நேரிற்கண்ட மாண்புகளையும் விளக்கிக்கூறி நிகழ்த்தியதோர் அரியபெரிய சொற்பொழிவு கேட்போருள்ளத்தில் என்றும் நின்றுநிலவும் நீர்மைத்தாகும். அதன்பின் ஆடற்கழகத்தின் காரியதரிசி திரு. M. இராஜாவையரவர்க ளால் இவ்விழாவின்சார்பில் நடைபெற்ற பலவகை விளையாடல்களைப்பற்றிய தோர் அறிக்கை படிக்கப்பட்டது. அப்பால் அவ்வாடல்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வரிசைக்கேற்ற பரிசுகள் மன்னர்தம் கரத்தால் வழங்கப் பெற்றன. இதன்பிறகு மண்டபத்திலிருந்து வந்தவரும், இந்திய நாவாய்ப் படையைச் சார்ந்தவருமான லெப்டினண்டு கம்மாண்டர் பேடு (Lt. Commander Bird) என்பவர் மன்னர்பாற் காணப்படும் விளையாட்டின்விளை வீர மனவியல்பை விளக்கிப் பாராட்டினர். அப்பால் முன்னர்ப்பேசியவர்களைப் பாராட்டித் தம் வந்தனத்தைத் தெரிவித்தும் பின்னர்ப் பல கருத்துக்களை வெளியிட்டும் மன்னரவர்கள் வழங்கிய தலைமைப்பேருரை பலரும் மதித் துப்போற்றும் மாண்புமிக்கு விளங்கியது. அவ்வுரையில் இவ்விழாவின் வைபவமெல்லாம் சேதுநாட்டுக் குடிமக்களின் பிறந்தநாள்வைபவமாமென் றும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி இவ்வாறு கொண்டாடுதல் அமையாததலால் அவர்கட்கெல்லாம் ஒரு பிரதிநிதியாகுமுறையில் இவ் விழாத் தம்பெயரால் நிகழ்வதாதலே தம் கருத்தாமென்றும், அக்கருத்தே தம்மை இதன்கண் ஈடுபடுத்துவதாயிற்றென்றும் பலகாலும் தாம் கூறும் கருத்தை மீட்டும் வலியுறுத்தித் தெளிவித்தனர். பிறகு பொதுமக்களது சார்பில் இராமநாதபுரம் வழக்கறிஞர் திரு. மாரிமுத்துப்பிள்ளையவர்கள் இனியதோர் பாராட்டுரை வழங்கியபின் வந்தனோபசாரம் மங்கலவாழ்த்து என்னும் அங்கங்களுடன் கூட்டம் இனிது கலைந்தது.

அடுத்த இரண்டு தினங்களில் திரு. G. N. பாலசுப்பிரமணிய ஐயர், சங்கீதரத்நாகரம் ஸ்ரீமாந். அரியக்குடி இராமாநுஜ ஐயங்கார் முதலான இன்னிசைச்செல்வர்கள் அரசரவர்கள்முன்னிலையில் யாவரையும் செவிக ளார இசையமுதூட்டி யின்புறுவித்தனர்.

இவ்விழாவின் இறுதிநாளாகிய நவம்பர்மாதம் 12-ஆம் தேதியன்று பகலில் இராமநாதன்டாக்கீஸ் வருமானத்திலிருந்து இவ்விழாவின் சார்பில் பல ஏழைமக்கட்கு அன்னதானம் வழங்கியதும் இங்குக் குறிக்கத்தக்கது.

அன்று மாலை காரியக்குழுவினர் சேதுவேந்தரவர்களுடன் ஒரு சிற் றுண்டிவிருந்து நிகழ்த்தினர். அப்பொழுது நிழற்படமொன்றும் எடுக்கப்

பட்டது. அவ்விருந்து நடைபெறுங்கால் இராமநாதபுரம் விகடகவி சங்கரையரவர்களால் நிகழ்த்தப்பெற்ற விகடம் விடாநகைச்சுவையை விளைவித்தது. அன்றிரவு அரண்மனைமுன்றிலில் மன்னரவர்கள் முன்னிலையிலே, பலபல கலாசாலைகளிலிருந்தும் வந்த மாணவரும் மாணவியரும் நிகழ்த்திய பல்சுவையாட்டு அங்குக் கூடியிருந்த பெருந்திரளான கூட்டத்தினரைப் பெருங்களிப்பிடை மூழ்கித் திளைக்கச்செய்தது. அதனுள்ளும் பரிசுபெற்றோர் பலராவர்.

இங்ஙனமாக இருபதிற்றுநான்குநாட்கள் செம்பியர்கோமானது அரசிருக்கையாகிய பழவிறன்மூதூர் விழவுமேம்பட்டுப் பொலிவுற்றுத் திகழ்ந்தது. இது பண்டைக்காலத்திற் செம்பியர்தம்பதியாகிய பூம்புகாரின்கண், நூலோர் புகழ நாலேழ்நாட்கள் நடைபெற்று அந்நகரை அளக்கலாகாத ஆநந்தத்திடை வைகுவித்த இந்திரவிழாவை அடிக்கடி நினைப்பூட்டுவதாயிற்று. இவ்வாறு, அரசிருக்கும் நகரம் உயிரினிருக்கையாய்ப் பொலிவுமிகப் பெற்றுத் திகழ்தலன்றே போற்றற்பான்மைத்தாகும். மற்றும், மன்னரவர்கள் தாமே தம் பிறந்தநாளை விழைந்து கொண்டாடிக்கொள்ளுவதாதலின்றிக் குடிமக்கள் தாம் மிகப்பெரியதோர் நிதியினைத் திரட்டித் தம் மன்னரது வெள்ளணிநாள்விழாவை இத்துணைப்பெருக்கத்திற் கொண்டாடியவாற்றை நோக்குங்கால், சேதுநாட்டுமக்கள் தம் மன்னர்பால் வைத்துள்ள வரம்பு கடந்த விசுவாசம் உள்ளங்கைநெல்லிக்கனியாகும். அன்றியும், அவர்கள் தம் விசுவாசத்தைப் புலப்படுத்தித் தம் உள்ளக்கிடக்கையை அரசர்க்கறிவித்துக்கொள்ள வாய்ப்புண்டாக்கியதுடன், அரசரும் தமதுள்ளத்தை அவர்கட்கு வெளியிடுதற்கான அமயமளித்து, மன்னர்க்கும் மன்னுயிர்க்குமிடைக் கிடந்த நற்றொடர்பை வலியுறுத்தி, நல்லாக்கம் தருவதாய் இவ்விழா அமைந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. இத்தகைய விழாக்கள் பல பெற்றுச் சேதுவேந்தர் சிறந்து வாழுமாறும், அவ்வேந்தர்க்கும் அவர் நாட்டு மாந்தர்க்குமிடையே நற்றொடர்பு இடையறவுபடாது நிலவுமாறும், சேதுநாடு செழித்தோங்கி எந்நாட்டினும் முன்னுட்டும் நாடாகவே என்றும் இலகுமாறும் எல்லாம்வல்ல இறைவன் திருவடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

ஜெ. நாராயணசுந்தரமையங்கார்,
ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர்,
இராமநாதபுரம்.

உ

சிவமயம்

இராமநாதபுரத்து ஸ்ரீ ராஜமாந்ய

சண்முகநாகநாத சேதுபதிவேந்தரவர்களது

35-வது ஆண்டுவிழாவில்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனம்

ஒடுக்கம், நெல்லையப்பத்தம்பிரானவர்கள் அளித்த

வாழ்த்துப்பா.

ஆசிரியவிருத்தம்.

சீரார் பாண்டித் திருநாட்டிற் றிகழு முகவை வளம்பதியிற்
பேரார் தமிழு முயர்நெறியாய்ப் பிறங்குஞ் சைவத் தனிநெறியும்
பாரார் புகழ வாதரிக்கும் பழைய சேது பதிமரபி
லோரா ரெழிற்பாற் கரன்சேய்முத் திராம லிங்கன் றருமேந்தல் 1

ஞாலம் போற்றுந் துறைசையினி னமையாட் கொள்ளும் பெருங்கருணைக்
கோலந் திகழ்பஞ் சாக்கரமெய்க் குரவ னிருதாட் செங்கமலங்
கால மூன்றும் வழுவாது கருத்தி லிருத்தி வாழுமுயர்
சீலந் திகழ்சண் முகநாக நாத சேது பதிமன்னன் 2

முப்பா னைந்தென் றிவ்வுலக மொழியு மாயு ளூறுகின்று
னிப்பா ரகத்தின் மனநினைந்த வெல்லா மனையா னெய்திவளந்
தப்பா துரிமைச் சுற்றங்க டழைய மெய்ம்மைப் போகநுகர்ந்
தெப்பா வலரு மேத்தநெடி தினிது வாழி வாழியவே. 3

சேதுவேந்தரது 35-வது வெள்ளணிநாள்விழா

நாண்மங்கலக்கவிகள்.

ஸேதுஸமஸ்தான மகாவித்துவான், பாஷாகவிசேகரர்

ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள் பாடியவை

மூதாதை காலம் முதற்றீர்ந்த வூர்கள்
முற்றுந் திரும்பிக் கொளற்கான கடனே
ஆதார மின்றிப் பொலம்மிக் கிருந்த
ஆடானை யூர்க ளனைத்தும் புகுந்த
தீதாம் வழக்கோ செயத்தான தெங்குஞ்
செய்கால் குளங்கள் திருந்திச் சிறந்த
மாதா வெனச்சேது நாடாளு மன்னன்
மாநாக நாதன் வரப்பெற்ற நன்றே.

கந்தை யிடையார் கலிங்க மரைக்கசைத்தார்
முந்தை வறியார் முழுதுண்டார்—எந்தை
செயசண் முகராஜன் சீர்மங் கலநாள்
இயலு மிசைகூர விங்கு.

பயவெம்பசி யோடும்படி பல்லோரினி துண்டார்
பண்ணாரிசை வல்லாருயர் பொன்னுடை புனைந்தார்
நயவண்கவி பாடும்புல வோர்நன்பரி சுய்த்தார்
நலவென்றியின் விளையாடினர் நன்பொன்கலம் வைத்தார்
உயர்பல்குடி யுள்ளார்செயு முறையான்மகிழ் வுற்றார்
உற்றாரனை வோருந்தம தெனவேகளி பெற்றார்
செயசண்முக ராசேச்வர தீரன்புவி வந்த
தினமங்கல தினமானது தேயம்முழு துக்கே.

தேவாதி தேவன்ரகு நாதனருள் கூரச்
சேதுபதி யென்றதிரு நாமவணி கொண்டாய்
பாவாதி தோஷமகல் புண்ணியநன் னாள்
பகரரிய பாக்கியமும் பண்ணியிசை நின்றாய்
பூவாழு மாதரளி பொங்குமிட மான
பொற்கோயி லன்முகவை போற்றவர சேற்றாய்
காவாழுஞ் செங்கைவள ருயர்நாக நாத
காவலவ வாழிநெடி தாழியினி தாயே.

இராமநாதபுரம் வித்வான் ராவ்ஸாஹிப்

ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் பாடியவை

மூவேந்தர் தங்கள்பின் முத்தமிழ்ப் பைங்கொடி மூண்டுபடர்
தேவேந்த்ர தாருவென் றன்றோர் புகழ்ந்த திருக்குலத்தே
கோவேந்தன் சண்முக ராஜேசப் பூம்பணை கோலமுடன்
பாவேய்ந்த நாண்மங் கலத்திற் றழைத்துப் பலித்ததுவே. 1

பண்டுகொண் டாரின்று போலவுண் டோபசி போய்வறிஞர்
உண்டுகொண் டார்நல் லுடைகள்கொண் டார்விருந் தூட்டமுதம்
மொண்டுகொண் டார்சண் முகராஜ னுண்மங் கலமுழுதுங்
கண்டுகொண் டார்பல வாடலும் பாட்டுங்கண் காட்சியுமே. 2

கோடிக் கதிபரெனப்பட் டவர்பல கோடிகடல்
ஓடிப் படைத்த பொருள்பொரு ளோவுயர் தெய்வம்வந்து
தேடிக் கொடுத்தநின் செல்வமன் றோநிலை நின்றசெல்வம்
கோடிக்கு நாயக சண்முக ராஜ குணாகரனே. 3

தேவை திருவுத் தரகோச மங்கை திருச்சுழியல்
மாவைகு புல்லை மருதூரா டானை வயங்கிறையோர்
கோவைக ளும்பணி கொற்றவை யோடருள் கூர்கமன்றோ
சேவை நிதந்தந் து சண்முக நாகநா தேந்திரற்கே. 4

சுகராஜ கேதன காமா இரணிய கர்ப்பயஜ்ஞ
ரகுநாத வம்ச ரவிகுல தீப நயசுகுண
ஜெகராஜ சேகர சண்முக ராஜேந் திரமுகவை
மகராஜ ஸேது மகிபால வூழியும் வாழியவே. 5

செந்தமிழ்

இராமநாதபுரம் இராஜாஸ் ஹைஸ்கூல் தமிழாசிரியர்
ஸ்ரீ ஜெ. நாராயணசுந்தரம் ஐயங்காரவர்கள் பாடியவை

மாலான சண்முக ராசேச மன்னன் மருவுமுப்பான்
மேலான வைந்துற்ற நான்மங் கலத்தியை வெள்ளணியின்
பாலான தூநிறம் பார்சத்து வத்தின் படிவமெய்தத்
தாலான அன்னவன் சீர்வெண்மை யொத்துத் தழைத்திடுமே.

நாடுவினை தூயனுயர் பீடுகெழு நாக
நாதமகி பாலனுல கோதவரு நாளால்
ஏடுவிரி போதணிந லாடைபுனை வாரும்
ஈசர்தளி தோறுமியல் பூசைபுரி வாரும்
தேடுபொருள் காணிலையம் நாடிநிறை வாரும்
சேதுபதி வாழவென வீதிவரு வாரும்
ஆடுகொடி மாடமெழில் கூடவணி வாரும்
ஆயினர்கள் மாமுகவை மேயினர்கள் மாதோ. 2

பைந்தமி ழுங்கலை யாரிய மும்பயில் பாவலர் பாட்டினிசை
பங்கய னென்றுசொ லுந்தகை யந்தணர் பன்னுமறைத்துழனி
சந்தமி குந்தெழு கின்றவி யம்பல சங்கமு ழங்குதொனி
சாலுமி டற்றிசை தண்ணுமை யின்னன தந்தசங் கீதவொலி
பந்துமு தற்களி விஞ்சுப லப்பல பந்தய வார்ப்பரவம்
பகருந றுஞ்சுவை யறுவகை யுண்டிகொள் பாலெழு மோணமலை
அந்தர மும்புவி யின்றிசை யெங்கணு மாரநி றைந்திடுமால்
அன்புகொள் சண்முக ராசனி லங்குவெள் ளணிகெழு நாளையிலே. 3

மங்கல வின்கவி வண்புல வோர்கொடை வாரிம கிழ்ந்திடுவார்
மருவிய வின்னிசை யாளர்பொ லன்குவை மன்னியு வந்திடுவார்
கொங்கலர் முல்லைமன் இன்புரை செம்பியர் கொண்டுக ளித்திடுவார்
குலவிய ஆடல்க ளிற்பரி சுற்றனர் கோதுக லித்திடுவார்
எங்குமி ருந்துவந் தேழைய ருணவு டையெய்தின ரின்புறுவார்
இறையவ ரன்பினி யன்றன பூசனை யேற்றன ருண்ணகுவார்
வெங்களி றின்றிற லொன்றிக லந்திகழ் விஞ்சிய தண்ணளியான்
விறல்கெழு சண்முக ராசது ரந்தரன் வெள்ளணி நாளையிலே. 4

போதமிகு நாக நாதமகி பாரீ பூவுதய மாகி மேவுதிரு நாளை
மேதகவி னோடு சேதுவள் நாடு வீறுபெறு மாறு சாறுகொள நீயே
ஆதரவி னால்நின் காதல்கெழு தேயம் ஆயபெரு நாளா யேயமகிழ் வாயால்
நீதகல வாழும் ஓதுபுக ழாய்நின் சீரதனை யாரும் ஒருமுறை யாமோ? 5

தேயந்தனி லேமுந்துறு சீர்தங்கிய சேது
தீவந்தனி லேவந்தவர் பாவந்தவிர் தேவை
ஆயந்தனி லேசெந்தமிழ் ஆயும்பலர் நேயம்
ஆகந்தனி லேவிஞ்சிய லாருந்தள வாரம்
தோயந்தனி லேயின் சுவை தோயுந்தமிழ் வையை
தூவண்புக ழாயிங்கிவை மேவுந்தகை வந்தாய்
மாயந்தனி லேநெஞ்சுபு காதம்புவி வாழ
வாழ்சண்முக ராசேச்சுர மால்நின்னிக ராரே! 6

தேவைத்தளி நாதற்குள மேவத்தர லுற்றாய்
சேதுக்கர சேமெய்ப்புகழ் மாதுக்குல குய்த்தாய்
மாவைப்பறை யாகத்திரு மானுக்கில ளித்தாய்
வாசத்தொடை தேனுக்குண மார்பத்தில மைத்தாய்
பாவைப்புனை வாருக்குயர் பல்பெற்றிகொ டுத்தாய்
பாடற்றமி ழுக்குச்சுவை நாடிச்செவி யீத்தாய்
நாவைக்கலை வாணிக்கிட மாவைத்தனை நாக
நாதற்கிவ னொப்பென ஓதப்பெரி தாலோ. 7

புலவர் பக்கலிற் பொதுமை நீக்கினை
பூவின் மக்களிற் பொதுமை நோக்கினை
வலிகொள் சூழலில் மடமி கந்தனை
மலியு மீகையின் மடமி குந்தனை
அலசெய் வார்திறத் தருள்து றந்தனை
அளிய மன்னுயிர்க் கருள்சி றந்தனை
கலிப ழிக்குள மஞ்ச நின்றனை
நாக நாதமற் றஞ்ச கன்றனை. 8

செறிவு மிக்கருங் கலையெ டுத்தனை சிந்தை யிற்சுருங் கலைவி டுத்தனை
வறிய சிற்றினம் வரவி கழ்ந்தனை மதிந லத்தவர் வரவு வந்தனை
அறிவி லர்க்கிடை வெளிறு கொண்டனை அறிவி னர்க்குய ரறிவு விண்டனை
நறிய சொற்புனை புகழ்ப டைத்தனை நாக நாதமற் றிகழ்து டைத்தனை. 9

அன்ன சத்திரம் வைத்தன வெத்தனை ஆல யங்கட் கமைத்தன வெத்தனை
மன்னு மந்தணர் பெற்றனூ ரெத்தனை மடங்க ளுக்கு வழங்கின வெத்தனை
பொன்ன ளித்த கலைக்கூட மெத்தனை புலவ ரின்னிசை யோர்பெற லெத்தனை
இன்னு மெத்தனை யெத்தனை நின்முனோர் ஈகை நாகநா தேந்திர பூபனே. 10

விளைநி லத்தொரு வித்திட ஆங்கது மேவு கோடியென் றுகி விளையுமால்
உளைவ கற்ற விரந்துவந் தார்நிலத் துன்கு லத்தவ ரோகையி னிட்டன
கிளைமி குத்துப் பலப்பல கோடியிற் கேடி லாது விளைந்து நிறைந்தன
வளைக டற்புவி யுள்ள வரைநின்று வாழி நாகநா தேந்திர வள்ளலே. 11

சீராம சேதுபதி யாவோர்தம் வீசுபுகழ்
சேர்தூய மாமரபு—திகழ்வோனே
சீராச ராசமுகில் நாடோத வேயுதவு
சேயாகி நேயமது—செறிவோனே

மாராம நாதபுர மூதூரி லேநெடிது
மாருத பானுவென—வளர்வோனே
மானார்கள் வேள்சண்முக ராசேச நாமகலை
வாழ்நாக நாதநிறை—மதியோனே

தேராம நாதனருள் ஓவாது பாயவரு
சீராள தேசமிகு—திறலோனே
தேவாதி தேவரகு ராமாவெ னாமுனடை
சீதோத தீசனளி—திறையோனே

ஆராம நேரவணி போதார மீதளிகள்
ஆதார மாயுறைய—அமர்வோனே
ஆனாத பாடல்தரு தேனாரு நீபருகி
ஆராயு மாலைபல—அணிவாயே. 12

இராமநாதபுரம் ராஜாஸ்ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்வான்

ஸ்ரீ ரா. இராமாநுஜையங்காரவர்கள் பாடியவை.

நல்லி சைப்புல மைப்புல்லங் காடனும்
ஞானம் விஞ்சுநல் லந்தையு நாகனுஞ்
சொல்லி லங்குநன் முல்லையுஞ் சாத்தியுந்
தோமின் மேலவர் தோன்றிய நாடுமுன்
கல்வி யிற்பெரி யோன்கம்பன் காகுத்தன்
காதை யிற்புகழ் கண்ணிய நாடிவண்
அல்லல் யாவும கற்றிடு நாடுநம்
அண்ணல் சண்முக ராஜன்றன் னாடதே. 1

ஆயு நன்மறை யின்பொருள் விண்டவன்
ஆன்ற மாமண வாளய தீந்திரன்
நேய மோங்கவ ளர்த்தக டாரமாம்
நீடு வண்பதி நின்றொளிர் நாடுமுன்
தாயு மானவ னென்றத போதனன்
றங்கி நிட்டை தலைப்புரி நாடுபல்
தேயம் வந்திறைஞ் சுந்திரு நாடுநம்
செம்மல் சண்முக ராஜன்றன் னாடதே. 2

மூத்த மிழ்த்துறை யின்முறை போயவர்
மூந்து பற்பலர் தோன்றிய நாடுயர்
பத்தர் யாவரும் பாடுத லம்பல
பண்டு தொட்டுள பார்புகழ் நாடருள்
வித்த கன்றிரு வீடணன் பேரிறை
விஞ்சு நற்சரண் மேவிடு நாடுநல்
லத்த நாளவ தாரஞ்செய் தம்புவி
யாளுஞ் சண்முக ராஜன்றன் னாடதே. 3

பொங்கு மாகட லிற்பொலி முத்தமும்
பொருவில் சங்கமும் பூத்தொளிர் நாடுதண்
கங்கை மேலுறும் வண்டமிழ் வைகையின்
கால்க ளான்வளங் கண்டுயர் நாடுபல்

செங்கை யாளர் பொலந்தரு நாடுமீச்
செல்வம் யாவுந் தினந்திகழ் நாடுவாழ்
நங்கள் சண்முக ராஜ நரேந்திரன்
நாளுங் காத்தரு ணற்செம்பி நாடதே.

திருமலர்ச் செல்வியு மிருநிலப் பாவையுந் திகழவிரு புயமீந்தனே
தேசுறும் வெண்ணளின மங்கைக்கு நாவினைச் சீர்பெற வளித்தேய்ந்தனே
மருவலரு நற்றளவ மாலைமது வண்டார மார்பகத் திட்டுதவினே
வண்டருவு மாரியும் வாழ்வுறக் கரமிடம் வள்ளன்மை பெறநல்கினே
அருளொளு மளக்கரிங் கமரவிரு நயனத்தை யகமகிழ வேதந்தனே
யடையார்தம்மகுடத்திலணியா யமைந்தொளிர் வஞ்சரண மிட்டார்ந்தனே
தெருண்மிகுக்கேள்விவளரச்செவிகொடுத்தனே செய்யகொடை மடமுற்றனே
செயநாக நாதவெம் மகராஜ நெடிதூழி செகமீது வாழிமாதோ. 5

பொற்புநிறை பூசுரர்க ளாசிமொழி சொற்றார்
பூவிலுயர் நாவலர்கள் பாவிலிசை கற்றார்
கற்புநிறை மாதர்நிகழ் காட்சிபல கண்டார்
காசினியி லேழையர்க ளாரவினி துண்டார்
அற்புநிறை கீதரிசை யாரமுத ளித்தார்
ஆடல்புரி வீரர்பலர் கூடியுள்க ளித்தார்
நற்புவியர் நன்மைமிகு நாடுமுயர் நாக
நாதமகி பன்னுதய மானதிருநாளே. 6

குலம்வ ளர்ந்ததுன் னரசி லேயுயர் குணம்வ ளர்ந்ததுன் செயலிலே
தலம்வ ளர்ந்ததுன் புகழி லேதிகழ் தமிழ்வ ளர்ந்ததுன் கொடையிலே
பொலம்வ ளர்ந்ததுன் புவியி லேமிகு புலம்வ ளர்ந்ததுன் னறனிலே
நலம்வ ளர்ந்ததுன் னகரி லேநனி நாக நாதனு மகிபனே. 7

உற்ற மிடியை யோட்டுவிக்கு முகக்குந் தகவை யூட்டுவிக்குங்
கற்ற கலையைக் கமழ்விக்குங் கருது மின்பங் காட்டுவிக்கும்
பெற்ற திருவைப் பெரிதாக்கும் பேணும் புகழைப் பிறங்குவிக்குஞ்
செற்ற மகற்றுஞ் சண்முக மால் சேது பதிதன் றெரிசனமே.

காட்சிக் கெளியை கடுஞ்சொல்ல னல்லை கனம்பொழியும்
மாட்சிக் குரியைாசன் மன்பதை மேன்மை வளர்ப்பதற்கே
ஆட்சிக் குரிய வருந்தொண்ட னுவைகிற் கார்கிகர்வார்
பூட்சிக் குரிய குணநாக நாதவெம் பூபதியே. 9

வழுதியர் பேணிய வண்டமிழ்ப் பைங்கூழ் வளரகிதம்
பழுதிய லாப்பொலம் பெய்நாக நாதவெம் பார்த்திபனே
எழுதியுஞ் சொல்லியு முற்றாத பேரிசை யீண்டியகீ
விழுமிய செல்வத்தொ டூழியும் வாழ்ந்து விளங்குகவே. 10

பரமக்குடி ராஜா சேதுபதி உயர்தர கலாசாலைத் தமிழாசிரியர்

ஸ்ரீ S. கேசவராமசாமித்தேவரவர்கள் பாடியவை.

வண்மையிற் சிறந்த பாரி காதையை வழங்கி னுனும்
உண்மையிற் சிறந்த மன்னன் உயர்கதை உதவி னுனும்
மண்ணுல கனைத்தும் போற்றும் வள்ளுவர்ப் பொருள்தந் தானும்
சண்முக நாக நாதன் தன்னிலம் பிறந்தார் தாமே. 1

மயின்மிசைக் காணுஞ் செவ்வேள் வடிவினை மானும் முந்நீர்
வயினெழுங் கதிரோன் சேது மன்னவன் முகக்கண் டேகச்
செயலினி துறுதல் நோக்கித் தினமவன் சேர்ப்பிற் றேன்றும்
உயர்வுறுங் குலத்திற் கொண்ட ஆர்வமென் றுரைக்கே னம்மா. 2

மாமணங் கமழுஞ் சேது மன்னவன் சண்மு கேந்த்ரன்
தேமணங் கமழும் வெண்பொற் றிருவிடை மருதூர்க் கீந்தான்
நாமணங் கமழுஞ் சீல நாவலர் மகிழ்ந்து போற்றும்
பாமணங் கமழுந் தோளன் பன்னெடு நாளும் வாழ்க! 3

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையின் கௌரவ தலைமையாசிரியரும்
செந்தமிழ்ப்பத்திராசிரியருமான

ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்கள் இயற்றியது.

இணைக்குறள் ஆசிரியப்பா.

சீர்மலி முகவைச் செழும்பதி வதிந்து
பார்புரந் தருளும் பார்த்திபர் ஏறே!
சேது காவல! சிபிகுல திலக!
நாக நாத ஷண்முக ராஜேஸ்வர!
நின்கடற் பிறந்த நித்திலக் கோவையும்
வெண்மணி குயின்று மிளிர்பொலன் கலன்களும்
விளங்கப் பூண்டு, நின் வெள்ளணி விழாவிற்
சிற்றர சாயுள சுற்றமும் பிறரும்
'திட்டிச்சிலை' யிட்டடி வணங்கச்
சேது பீடம் திகழவீற் றிருக்கும்நின்
ஓலக்கம் காண் ஊழிலன் உன்மீது
ஆக்கிய இதனை நோக்கி யருண்மதி
நின்குல முதல்வர் போல நீயும்
பட்டாங்கிற் பொருளீட்டி
நட்டார்க்கு நலனாற்றி
உற்றோரை உகப்பித்துக்
கற்றோரைக் களிப்பித்துத்
தீயோரைச் செயலழித்துத்
தூயோரைத் துயரொழித்து
நாட்டில்நல் அறம்நாட்டிக்
காட்டில்வல் விலங்கோட்டிப்
பாட்டில்நின் புகழ்காட்டி
ஏட்டில்நின் செயல்தீட்டி
ஒக்கலை உயர்வித்து மக்களை மகிழ்வித்துச்
செய்வன செய்து தெய்வம் போற்றி
அமிழ்தினும் இனிய தமிழ்தழைத் தோங்கச்
சங்கம் புரந்து தமிழா ராய்ந்து
நின்னா ளெல்லாம் நன்னா ளாக
நீ நீடூழி வாழி
நின்கடல் எக்கர் மணலினும் பலவே.

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

வித்வான். ஸ்ரீ R. வீரராகவையங்காரவர்கள் பாடியது.

நேரிசையாசிரியப்பா

உளங்களி சிறக்கும் வளந்தலை மணந்து
தென்றமிழ் வடமொழி என்றிரு மொழிக்கும்
ஒருநிலைக் களனாய்ப் பெருமை சான்ற
சேதுநாடாளும் செங்கோல் வேந்தே!
நாக நாத ஷண்முக ராஜ!
சீரியோர் செறிந்த திருநா ளிருக்கையுட்
புலத்துறை நுனித்த புகரில் காட்சி
நாவலர் நாவலங் கண்டு நனிமகிழ்ந்து
பாவலர் பாவின் பயன்பல பருகி
வரிசையின் வழாஅப் பரிசில் வழங்கிப்
பைந்தமிழ் வளர்த்துப் பார்மிசை ஓங்கும்
பல்புகழ் நிறுத்த பார்த்திவர் மருக!
அறிவும் செறிவும் அருளும் ஆற்றலும்
உருவும் திருவும் மருவு கண்ணோட்டமும்
கொடையும் பண்பும் குலவிய புகழாய்!
இவ்வோ ரனைய இனிய பல்குணனும்
ஏனோர் வேந்தர்க் கியைந்தொருங் கின்மையின்
நின்னோரனையை நீயே ஆதலின்
நல்லிசைக் கவிஞர் சொல்லுதற் கவாவும்
புகழெனத் தகுவது நினதே பெரும! நீ
அறந்தலை சிறப்ப ஆன்றோர் உவப்ப
மன்னுயிர் மகிழ மழைபெயல் உதவ
வித்திய தாயிரம் விளைந்து பலபல்கச்
செந்தமிழ் தழைப்பச் செங்கோல் ஓச்சி
ஏத்தல் சான்ற இந்நாள் போலும்
பெருமங்கல நாள் ஆயிரம் பேணி
மருவு சுற்றமுடன் மனமுவந் துவந்து
நீடு வாழிய நெடியோய்!
வாழி வாழிநின் வழிநனி சிறந்தே.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர்
ஸ்ரீ சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றியவை.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீலந்தனி லுயர்வோருறை செம்பித்திரு நாடன்
திசையெட்டினு மிசையுற்றிடு முகவைப்பெரு நகரான்
சாலத்தமி ழொருமூன்றுணர் தருநாவலர் பெருமான்
சகமெச்சிடு மதுரைத்தமிழ்ச் சங்கத்தனி யதிபன்
ஞாலத்தவர் புகழ்ஷண்முக ராஜேச்வர நாக
நாதத்திரு நாமம்புனை நங்கோமகன் வேலைச்
சேலைப்பொரு விழியார்க்கணி திகழ்சித்தச னனையான்
தீர்க்காயுளி னுடனுணை சிறந்தூழிபல் வாழி

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அம்புவிதன் னகங்களிக்க அறநிலையம் பலசெழிக்க வவனி தாங்கும்
செம்பிவள நாடுடையான் தென்முகவை யூருடையான் நேசம் போற்றும்
கம்பமத கரியுடையான் கவனமிகு பரியுடையான் சாட்சி மிக்க
உம்பர்புகழ் திடமுவணக் கொடியனுமக் கொடியுடன்மும் முரசு முள்ளான்

கந்தமா தனவரையான் கமழ்தளவ நறுந்தாரான் கருணை மிக்கான்
இந்தமா நிலத்தெவனுஞ் செலப்பணிக்கும் ஆணையினான் ஈர்ந்தண் வைகைச்
சந்தமார் நதியுடையான் சண்முகரா ஜேச்வரப்பேர்த் தரணி வேந்தன்
விந்தைசேர் மணிமார்பன் முறைசிறந்து புவிபுரந்து விளங்கி வாழி . 3

எப்பாரும் புகழ்முகவைச் சண்முகரா ஜேசுவர இறைவன் சன்ம [சூழ்ந்த
முப்பானைந் தெனும்யாண்டின் விழாக்கண்டோர் மிகக்காண்பான் மூந்நீர்
இப்பாரிற் கண்கள்பல படைத்திலனே யயனமக்கென் றெண்ணி லாதோர்
மெய்ப்போதத் துடன்விளம்பி விண்ணவர்போ லிமையாக்கண் மேவி னாரே.

கட்டளைக்கலித்துறை

வையம் புரந்திடுஞ் சண்முக ராஜேச் வரமகிபன்
ஐயைந்தொ டீரைந்தின் யாண்டு விழாக்கண் டகமகிழ்ந்தோம்
மெய்யன் புடன்யாண்டு தோறும் பிறப்பு விழாவியற்றிப்
பெய்யும் முகில்போற் புவிகாத்து வாழி பெருநிலத்தே.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர் இராமநாதபுரம் ஸ்ரீ K. சிவஞானம்பிள்ளையவர்கள் பாடியவை.

கன்னித் தெங்கின் கனிசூதக் கனிநல் வாழைக் கனிபலவின்
கனிகள் கசிந்து பெருக்கெடுத்துக் கழனி பாய்ந்து செந்நெல்முதன்
மன்னும் பயிர்கள் வளர்த்திடுஞ்சீர் மருவும் செம்பி வளநாடன்
மன்னர் மன்னர் போற்றுமுயர் மகிமை நிறைந்த சேதுபதி
உன்னும் பொழுதி லிவர்க்கிணையா யொருவ ரிலையென் றுரைசான்ற
வொண்மை மிகுந்த சண்முகரா ஜேச மகிப னுவப்பெய்தி
மன்னி யுலகில் மாதவர்க்கும் வறியர் தமக்கும் புலவருக்கும்
வாரி வாரி மாநிதியம் வழங்கி வாழி வாழியவே. 1

மஞ்சாருமணிமாடமோங்குசீர்த்தி மாமுகவைப்பதிவாழு மன்னர்க்கெல்லாம்
எஞ்சாத ஞானகுரு துறைசை வாழும் எற்றமிகு குருநமச்சி வாய னென்றே
நெஞ்சாரத் துதித்துவருநிருபன் மேலாம்நியமமுள சண்முகரா ஜேசவேந்தன்
அஞ்சாத நெஞ்சமுட னீகை யூக்கம் அறிவுமிகு சேதுநாட் டரசன் வாழி 2

கந்தமிகு கடம்புபுனை கந்தனடி மறவாத கருணைக் கோமான்
சந்ததமும் தமிழ்வளர்க்கும் தாவில்புகழ்ச் சேதுபதி தரணி யோர்க்கு
வந்தவிலம் பாடகற்றும் வண்மையுள சண்முகரா ஜேச மன்னன்
சிந்தைமகிழ் வுடன்பூமி பல்லாண்டு நனிபுரந்து சிறந்து வாழி. 3

பரிக்கட்டு மிகவுடையான் சண்முகரா ஜேச்வரனும் பாராள் வேந்தன்
வரிக்கட்டு வரிவிழியார் மடலூரும் வடிவழகன் மன்னோர் போற்றும்
கிரிக்கட்டு கேதனத்தான் கிரிக்கட்டு விளையாட்டிற் கீர்த்தி மிக்கான்
அரிக்கட்டு வயல்முகவை தனையாளு மிரவிகுல வரசன் வாழி. 4

வானந் தருகங்கை சென்னியில் வைத்தவன் வண்கழன்மேற்
கானந் தருமிசைப் பாடல்கள் பாடிக் கசிந்துவப்போன்
மானங் கலனுக் கொளுநாக நாத வரதனென்றும்
தானம் பலசெய்து பல்லூழி வாழி தரணியிலே. 5

சந்தார் தடம்புயன் சண்முக ராஜ தராதிபன்றன்
மந்தா கினிப்பெயர் பெற்றிடு வையை வளநதியான்
சிந்தாத செல்வமும் தீர்க்கா யுளும்பெற்றுத் தேயமெல்லாம்
வந்தே துதிக்க மகிழ்ந்தூழி வாழி மகிதலத்தே. 6

பிறந்தநாள் வைபவங் கொண்டாடு நாளிற் பெரிதுமுவந்
தறம்பல செய்துதம் நாட்டவர்க் கெல்லாம் அறிவுறுத்தும்
திறந்தனைக் கொண்டிடும் நாகநா தேந்த்ர திவாகரன்றன்
சிறந்திடும் பேறு பலபெற்று வாழி செகதலத்தே. 7

அல்லிப்பூஞ் சேக்கைமிசை யன்னச்சே வல்பெடையைப்
புல்லிக்கண் டோங்குதிருப் பொய்கையான்—முல்லைமலர்த்
தார்புனையும் சண்முகரா ஜேச தயாநிதிதான்
சீர்மையுடன் வாழ்க செழித்து.

ஆறுமதி சூடிமைந்தன் ஆறுமுகன் றன்புகழைக்
கூறுமதி பெற்றிடுஞ்சீர்க் கோமானும்—வீறுபுகழ்
தங்குமெங்கள் சண்முகரா ஜேசமுகில் சந்ததமும்
மங்களமா வாழ்க மகிழ்ந்து.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையின்
உதவிப்பத்திராசிரியர் T. K. இராமானுஜையங்கார் இயற்றியது.

சந்தவிருத்தம்

வாழை பூகம ணங்கமழ் சந்தனம்
மாவ சோகக ரும்பு மி டைந்துநெல்
வான ளாவவ ளர்ந்துசெ றிந்திடும் வளனுலிவ்
வாரி சூழுல கந்தனின் முன்புசொல்
சேது நாடுசி றந்துவி ளங்கிட
வாகு மேருசு மந்துபு ரந்தருள் மகிபாலன்

ஆழி யேலணை கண்டப ரம்பொருள்
ஆனை யீருரி கொண்டருள் சுந்தரி
ஆறு பாய்சடை யந்தணன் என்றியர் அடிமீதில்
ஆன காதன்மி குந்துள ஷண்முக
ராஜ ராஜது ரந்தர னன்புவி
யாளு வோர்களின் முந்துபெ ருந்தனி யரசாகி

மேழி யால்வரும் ஒண்பொரு ளும்பிற
வாரி யாவுநி றைந்துயர் மன்பதை
வீறு மேவவி யந்திடு செந்தமிழ் வியன்ஞால
மீதி லேநிலை நின்றுத ழைந்திட
வேத வேள்விகள் நன்குநி கழ்ந்திட
மேக மாரிவ ழங்கிட என்றுமிவ் விதமாக

மாழை நேர்கணின் மங்கையர் மங்கல
கீத மோதவு வந்துசெ ழுந்தமிழ்
வாண ரானவர் தங்கவி தந்தின மலர்தூவி
வாழி பாடிட அந்தணர் மந்திர
ஆசி யேசொல வென்றிவி ளைந்திட
வாழி யூழிம னங்களி கொண்டுயர் பூவிமீதே.

பண்டைத் தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(உகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பாவில் தமிழர்

தமிழர், மேற்கு ஆசியாவில் குடிகொண்டிருந்து பின் சற்றுச் சற்றாகக் கிழக்குநோக்கி வந்தவர்கள், அந்தப் பண்டைநாட்களிலேயே மேற்கே ஐரோப்பாவிலும் பரந்திருந்தார்கள் எனத் தோன்றும். நம் சர்மானிய ஆராய்ச்சியாளர் பழைய பூமிசாஸ்திர நூல்களின்படியே ஐரோப்பாவில் எடுத்துக்காட்டுகின்ற பல ஆறு மலை ஊர்ப் பெயர்களுட் சிலவற்றை இங்கு அறுவதிப்போம். மத்திய இத்தாலியின் சம்னியம் என்ற பூர்வகாலப்பிரிவில் தமறுஸ் (இன்றைக்கு Tammars) எனும் ஆறும், பிரித்தானியாவிலுள்ள கோன்வாலில் அப்பெயருள்ள (இன்றைக்கு Tamar) ஆறும், இஸ்பானியாவில் தமறு அல்லது தமறிஸ (இன்றைக்கு Tambra) எனும் ஆறும் காணப்படுகின்றன. இவையெல்லாம் மலையருவிகளும் விசையாய்ப்பாய்வனவுமாதலால் தமதத ஆறுகள் எனத் தமிழ்ப்பெயர் அடைந்தன. ஐரோப்பியமொழிகளில் இவற்றின்பெயரை விளக்க வழியில்லை; ஆதலால் இவை தமிழே ஆக வேண்டும். தென்னிந்தியாவிலுள்ள சிலேறு (ஏறு=ஆறு) என்னும் பெயர் கொண்ட இருநதிகளுள் ஒன்று இத்தாலியிலுள்ள லுக்கானியாவில் சிலேறுஸ் (Silerus இன்றைக்கு Sele) எனப்படுகின்றது. மற்றதற்கு சிஸ்படானுவில் சிலாறுஸ்(Silarus, இன்றைக்கு Sillaro) என்று பெயர். இவை கன்னடத்தில் ஸில்=விசையான என்றிருக்கும் அர்த்தப்படி விசையான ஆறுகள்போலும். வட இந்தியாவில் ருவல்பிண்டியிலுள்ள சில் எனும் தனிப்பெயரைக்கொண்ட ஆறுகள் பல ஐரோப்பாவில் உண்டு. ஒரு சில் (Sil) மினோ ஆற்றினுள்ளும், ஒரு சில் (Ziul) ருமேனியாவிலுள்ள டொனுபு ஆற்றினுள்ளும், வேறொரு சில் (Sill) இன் ஆற்றினுள்ளும், மற்றொரு சில் (Silla) எற்சு ஆற்றினுள்ளும் விழுகின்றன. வட இத்தாலியிலுள்ள திறேவிஸோவில் சிலெ, சிலிஸ் என இருநதிகள் ஓடுகின்றன. திறேலில் ஒரு சில்-தாழ், வேறொரு ஆறு-தாழுக்குச் சமீபத்திலிருக்கின்றது. பபிலோனியாவில் விளங்குகின்றதாக நாம் முன்னர்க்கூறிய சிப்பாறுபோல இஸ்பானியாவில் இபெறு (Iberus, இன்றைக்கு Ebro) என ஒரு நதி காணப்படுகின்றது. சிப்பியும் இப்பியும் ஒன்றே எனக் காண்க. இஸ்பானியா முழுதும் இவ்வாற்றுப்பெயரால் இபேறியா (Iberia) எனவும்படும். எழுகுன்றுபடைத்த நகராகிய றோமையிலுள்ள திபேர்நதி (Tiber) திப்பி(=திடல் ஏறு=)ஆறு என்பதற்கு ஐயமில்லை. அல்பிஸ்மலைக்கு இப்பாலுள்ள கல்லியாவில் (பிராஞ்சில்) பனாறுஸ் (Panarus,

இன்றைக்கு Panaro) எனும் கிளையாறு தமிழ்ப் பணையாறுதானேயாம். பிராஞ்சிலுள்ள இசார் (Isaros, Isaras, Isara, Iser, Isere, Eisack, Isarcus) இசையாறு எனும் தமிழ்ப்பெயராம். இது சத்தமிட்டு வெகுவிசையாய்ப் பாய்கின்ற ஒரு நதி. இவ்விதமே நெக்கார் (Neccarus, Neccara, Nicer, Niger) தமிழில் நக்காறு=கரையை அழிக்கும் ஆறு எனப் பொருள் படும். அம்பேர் (Amper, திரோலில்) அம்மேண் (Ammern, துரிஞ்சியாவில்) அம்பிற (Ambra, இத்தாலியில்) எனும் நதிகள் அம்பு ஆறு= (ஒல்லாந்தத்தில் Waterbeck என்றதுபோல) நீர்நிறைந்துபாயும்நதி எனத் தமிழிலேயே பொருள்கொள்வதாகின்றது. அதுபோல சர்மனியிலுள்ள வேசர் (Weser) பிராஞ்சிலுள்ள விசேர் (Visere பழைய சாசனங்களில் Visara) விசையாறு எனும் தமிழ்ச்சொல்லேயாம். ஆறு எனும் சொல்லுத் தனித்தும் ஐரோப்பாவின் பலஇடங்களில் பலநதிகளுக்குப் பெயராகின்றது. சுவிட்சர்லாந்தில் ஒரு Aar (e' உம், ஒல்லாந்திலும் வெஸ்தர்வால்டிலும் வால்டெக்கிலும் ஒவ்வொரு Aar உம், றையின்நதியில் ஒரு Ahr எனும் கிளையும், திரோலிலே றின்ஸநதியிலே Ahr எனும் ஒருசிற்றாறும், துறிஞ்சியாவில் ஒரு Ohra உம், எல்பெநதியில் Ohre என ஒரு கிளையும், லானில் Aar-bach என ஒரு கிளையும், Ara-bach என எல்சாசில் ஒன்றும் இன்னன பிறவும் உள. ஆறு என்றசொல் அற் எனும் அடியாய்ப் பிறந்தது. அறுத்து ஓடுவது=ஆறு. அறலும் அது. ஐரோப்பியபாஷைகளில் அற் எனும் அடியிற்பிறந்த பலசொற்கள் இருப்பினும் திராவிடமுறைப்படி ஆறு என வர அவற்றில் ஒரு விதியில்லை. அது திராவிடமொழிக்குலத்துக்கே தனியுரிமையான ஒருசொல் என்பதை மனதில் வைத்துக்கொள்க.

இனி, மலை எனும் திராவிட உருவங்கொண்டசொல்லாற் குறிக்கப்படும் இடங்களும் பல ஐரோப்பாவிற் காணப்படும். சுவிட்சர்லாந்தில் மலன்ஸ் (Malans) மலன்தியா (Malantia) எனும் பெயர்கள் வருகின்றன. மலன்தியா என்பது மலையை அண்டியது எனப் பொருள்படும். இவ்வாறே சிலன்தியா (Silantia) எனத் தென்பிராஞ்சிலுள்ள. இடமும் சில் எனும் ஆற்றையண்டியது எனப்பட்டது. அண்டி என வரும் பெயர்கள் மலையாளத்தில் கடலண்டி, குயிலண்டி என இருப்பதையும் காண்க. அல்ப்ஸ் மலைப்பாகங்களில் ஸ்கரன்தியா (Scarantia) என்றிருப்பதும் (சிகர அண்டி) மலைச்சிகரத்தை அடுத்தது என்றே பொருள்படும். இவ்வாறே மலண்டெர் (Malander மலையண்டு ஏறு), மலப்பன (Malapane மலயப்பணை), மலெய (Malea, Meleya), மலெனிற்ஸ (Malenity) மலிஸ் (Malis, Melis), மலேறு (Mclero) மலெண்டார் (Mallendar, மலையண்டாறு) ஆகிய பல ஆங்காங்கு உள.

மலைக்குப் பழந்தமிழில் விண்டு எனும் பெயர் உண்டு என்றோம். இபேர் எனும் இப்பியாறு ஓடிய இஸ்பானியாவின் மலையொன்றை விண்டியுஸ் (Mons Vindius) எனப் பழையநூலாசிரியர்கள் சொல்லுவார்கள். அதன் சரிவுகளிலே வசித்தவர்களைக் கொங்கணர் எனும் அன்னியர் என ஓறேஸ் (Horatius) எனும் லத்தின் கவிஞர் கூறுவர்.* கொங்கு (மலையாளத்தில், கொங்நு) என்பது மலைச்சரிவு; கொங்கணர் = மலைச்சரிவில் வசிப்போர். நம் இந்தியாவின் விந்தியமலைச்சரிவின்கீழுள்ளபாகமும் கொங்கணம் எனும் பெயருள்ளதன்றோ? இஸ்பானியாவில் ஒரு இப்பியாறும் ஒரு விண்டுமலையும் கொங்கணரும் இருந்தமை அத்தேசத்திலே தமிழர் குடியிருந்தமைக்கு நல்ல சாட்சியாகும். அதன் கிழக்குக்கோடியில் பாஸ்கு எனும் வேற்றுச்சாதியார் இன்றைக்கும் தமிழோடு மிக உறவுபூண்ட ஒருமொழியை Basque பயின்றுவருதல் கவனத்துக்குரியது.

ஐரோப்பாவிலுள்ள பலவான தமிழ் இடப்பெயர்களையெல்லாம் எடுத்தோதப் புகுந்தால் மிக விரியும். இரண்டொன்றைமட்டில் காட்டிமுடிப்போம். பொகேமியாவிலே முற்காலம் ஒருவகைக் கவரிமாடுகள் நிறைந்திருந்த காடொன்று இன்றைக்கு கவுறேத்த (Gawreta) எனப்படுகின்றது. கிரேக்கநூலாசிரியர்கள் அதை Gaubreta Gabreta என்று குறித்தனர். இச்சொல்லிற்கு ஐரோப்பியபாஷைகளில் கருத்தில்லை. தமிழில் கவரி - ஏற்றம் = கவரிமாடுகள் மிகுந்த மேட்டுப்பூமி என்ற கருத்தே பொருத்தமாகின்றது. கவரி = கவர்த்த கொம்புள்ளது என்ற தமிழ்ச்சொல்லேதான். ஏற்றம் ஏறிப்போகவேண்டிய மேட்டுத்தரைக்குப்பெயர். கவரிப்பெயர் சர்மனியத்தில் Haber, கிரேக்கத்தில் Kapros, லத்தீனில் Caper என கவரிமாடுபோன்ற வேறு மிருகங்களுக்கும் வந்தது. சர்மனியத்தில் Gabel என்பது கவர்த்த ஈட்டியாம். ஏற்றம் என்ற சொல்லுக்கு இணை ஐரோப்பியமொழிகளில் இல்லை. இனி, ஆஸ்திரியாவின் தலைநகர் மற்றொரு உதாரணம், சர்மனியத்தில் வீன் (Wien) நகர் எனப்படுவது ஆங்கிலத்தில் வியென்னு ஆகும். இதன் பழையபெயர் விலிபொன (Wilipona) என்றிருந்தது. பொண (pona) என்பது தமிழ்ப்பண்ணை அல்லது தோட்டமே. இந்த ஈறு வேறுபல ஐரோப்பிய ஊர்ப்பெயர்களிலும் காணப்படுகின்றது. உதாரணம்:-Ratisbona, Scarpone Narbonne Brigobanne ஆதியன. தனியே Bonn என்ற ஊர்ப்பெயரும் உண்டு. உரோமர் வியென்னுவில் தாபித்த

*In the ode "Descende Cocle" Geographischer Anzuger,, Febr, 1937.

கோட்டையை Castra Bonnesia என்றனர். இந்தப் பொண தமிழ்ப்பண்ணை யே என்பதற்கு இந்தியாவில் இளையார்பண்ணை ஆதியஇடங்கள் இருப்பது சான்றாகும். இனி, விலி என்பது விளை எனும் தமிழ்ச்சொல்லே. வியன்னு ஒருகாலம் சிறந்த பயிர்விளையும் பண்ணையாயிருந்தது என்பதற்கு அது மேற்கே ஒரு மலைத்தொடருக்கும் கிழக்கே ஒரு ஆற்றுக்கும் இடைப்பட்ட செழிப்புள்ள சமபூமியாயிருத்தல் போதிய ஏதுவாகும்.*

வுடினர் எனும் சர்மனிய ஆசிரியர் சர்மன் (Germen) என்ற பெயரும் வேறுபல ஐரோப்பியப் பழக்குலப்பெயர்களும் தமிழே எனப் பல நியாயங் களைக்கொண்டு பின்னுமொருநூலில்† நிரூபிப்பதை இங்கு ஒரு வார்த்தையில் மட்டும் சொல்லிமுடிப்போம். சர்மன் எனும் பெயர் வடக்கிலிருந்து இறங்கி வந்த வெள்ளையர்களுக்கு இருண்டநிறத்தவர்களான தமிழ்ப்பழங்குடிகள் தங்கள் மொழியில் இட்ட கேழ்மர் அல்லது கெழுமர் அதாவது "வெள்ளைக் காரர்" எனும் பெயரேயாகும். பலநூறுவருஷங்களாய் ஐரோப்பாவிலே பரந்துகொண்டுவந்த ஆதிமனுக்குலத்தவர்களுள்ளே வடதுருவத்தைநாடிச் சென்றிருந்தோர் "பாண்டுபிடித்த" வெள்ளையராய்ப்போயும் சனத்தொகை யிலே கதித்தவராயும் மீண்டு ஒருகால் மத்திய ஐரோப்பாவை நோக்கிவந்த காலையில், இப்புதுவருவாயானோர்க்கு முன்னிருந்தோர் கேழ்மர் எனப் பெயரிட அதுவே அன்னோர் பெயரும் அவர் கைப்பற்றிய நாட்டின்பெயரும் ஆயிற்று என்ப. (அலமன்னி Alemanni, Almagne) எனும் அன்னோரது மற்றொரு பெயரும் அலை, அலம்பு எனும் தமிழ்ச்சொல்லிற்பிறந்த ஆற்றின் பெயரால் வந்தது எனக் காட்டுவர். இவ்வாறே நம் ஆசிரியர் முப்பதுக்கு மேற்பட்ட ஐரோப்பியக் குலப்பெயர்கள் தமிழ்ச்சொற்களாலானவை என ஆராய்ந்து நிரூபித்திருக்கின்றனர்.

ஆகவே, தமிழர் ஒருகாலம் கல்தேயாப்புறங்களிற் குழுமியிருந்து விருத்தியடைந்து பின் மேற்கிலும் கிழக்கிலும் பரந்துபோயினமை வெள் ளிடை விலங்கலாகின்றது.

---

* Geogr. Anz. 1936, Heft 24.

† Germanen und Andere fruheuropaische Namen Nordischer Staemme.

1944ஸ் ஜனவரீ 11௳ (சுபானுஸ் மார்கழிமீ 27௳) மாலை 5½ மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற

தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C. —உப-அக்கிராசனாதிபதி.
2. ,, ராவ்பஹதூர் P. ரங்கஸ்வாமி நாயுடுகாரு
3. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்
4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. —காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 சங்கமாபீசு வரவுசெலவுகணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2 இராமநாதபுரம் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் பிரசிடெண்டும் கௌரவ ஸ்பெஷல்மாஜிஸ்டிரேட்டுமான மகா-ா-ா-ஸ்ரீ P. ராமஸ்வாமித் தேவரவர்களைச் சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளலாயிற்று.

3 இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய

(1) ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L. அட்வொகேட், சித்ரா, மயிலாப்பூர், சென்னை.

(2) ,, N. சீலமேகம்பிள்ளையவர்கள், முனிஸிபல் ஒர்க்ஷாப், மதுரை.

(3) ,, K. S. பழநியப்பபிள்ளையவர்கள், பிரசிடெண்டு, கௌசைத் தமிழ்க்கழகம், சர்க்கார் சாமக்குளம், கோயம்புத்தூர்.

(4) ,, V. S. தோதாத்ரி ஐயங்காரவர்கள், ஸம்ஸ்கிருத பண்டிதர், ராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

இவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

4 மதுரை M. R. C. C. Bank-ல் வட்டிக்குக்கொடுத்துள்ள Fixed Deposit தொகை ரூ. 25,011-5-0 யும், ஷெ பாங்கிலேயே மறுபடியும் ஒரு வருஷத்துக்கு ரூ. 100-க்கு 3 வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

5 இராமநாதபுரத்தில் நடைபெற்ற சங்கத்தின் 42-வது வருஷோத்ஸவக்கொண்டாட்டம் சம்பந்தமாக எழுதிய ஆபீஸ் மெமோ ரிக்கார்டில் வைக்கலாயிற்று. மாட்சிமைதங்கிய கனம் சேதுபதிமஹாராஜா அவர்கள் சங்க வருஷோத்ஸவத்தை இராமநாதபுரத்தில் நடத்தியதற்கும், சங்கப் பரீக்ஷைகளில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பரிசுகள் அளித்தல் முதலியவை சம்பந்தமான செலவுகளுக்குப் பொருள் உதவியதற்கும் இச்சங்கத்தின் நிர்வாகசபையார் நன்றிபாராட்டி வந்தனமளிப்பதை மஹாராஜா அவர்களுக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று. இவ்வருஷத்தில் அளித்த இதர பரிசுகளின் தொகைகளையும் சங்கத்துக்கு உதவும்படி மஹாராஜா அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

6 இச்சங்கத்தின் காரிய நிர்வாகசபையங்கத்தினருள் ஒருவரான மகா-ா-ா-ஸ்ரீ P. ரங்கஸ்வாமிநாயுடு B.A., B.L. அவர்களுக்கு அரசாங்கத்தார் 'ராவ்பஹதூர்ப்'பட்டம் அளித்திருப்பதுபற்றிச் சங்கக்காரியநிர்வாக சபையின் இதர அங்கத்தினர்கள் தங்களுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து அதனை ரிக்கார்டில் பதிவுசெய்தனர்.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை.

11—1—'44.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	*நேமிநாதம் (உரையுடன்)	0	6	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	8	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ...	0	10	0
9.	அநுமானவிளக்கம்	0	2	0
10.	அட்டாங்கயோகக்குறள்			
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்	0	4	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	3	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்			
15.	*திருச்செந்திற்கலம்பகம்	0	8	0
16.	திருவாரூருலா	0	12	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	4	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	3	0
19.	தேவையுலா			
20.	*நரிவிருத்தம்	0	8	0
21	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)			
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா	0	1	0
24.	குருமொழிவினாவிடை	0	2	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	1	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	8	0
27.	மதுரைத்திருப்பணிமாலை			
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்	0	3	0
30.	ஞானாமிர்தக்கட்டளை			
31.	*பாண்டியம்	0	8	0
32.	மகிஷாபஞ்சகம்			
33	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திர நூறுபாட்டுக்குறை			
36.	உபமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மிநாராயணையர், மானேஜர்.